விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 28 சனிக்கிழமை (14.11.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 330

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நேற்று ஹர்த்தால்

# வடக்கு - கிழக்கு முடங்கியது!



(யாழ்ப்பாணம்)

சிறைகளில் உண்ணாவிரதமிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி பொதுமன்னிப்பில் விடுதலை செய்யக்கோரி நேற்று வடக்கு - கிழக்கில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் பல வருடங்களின் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுமையாக முடங்கி

## ஹெகலியவுக்கு பிடியாணை!



(யாழ்ப்பாணம்)

முன்னாள் ஊடகத்துறை அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹெகலிய ரம்புக்வெலவுக்கு மத்திய மாகாணத்துக்கான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஊடாக யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவ

24ஆம் பக்கம் பார்க்க....

## 13 அரசியல் கைதிகள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

பொதுமன்னிப்பில் தம்மை விடுதலை செய்யக்கோரி சிறைச்சாலைகளில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளில் 13 பேரின் உடல் நிலை பாதிக்கப்பட்டு நேற்றைய தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அரசியல் கைதிகளை பொது மன்னிப்


23ஆம் பக்கம் பார்க்க....

## சுமந்திரன் எம்.பிக்கு மெல்பேர்னில் எதிர்ப்பு



(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியத் தமிழ்க் காங



அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் பல வருடங்களின் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுமையாக முடங்கி யிருந்தன. (24ஆம் பக்கம் பார்க்க)



(மெல்போர்ன்)
அவுஸ்திரேலியத் தமிழ்க் காங கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி யின் 23ஆம் பக்கம் பார்க்க....

# இழுபறிகளுக்குப் பின்னர் 24 கைதிகள் விடுவிப்பு!

(கொழும்பு)
பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டு, பிணை வழங்கப்பட்ட கைதிகளில் 24 பேர் நேற்று பிற் பகல் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளனர்.

இழுபறிக்கு மத்தியில், குறித்த 31 பேருக்கும் கடந்த புதன்கிழமை பிணை 23ஆம் பக்கம் பார்க்க....

# வங்கக்கடலில் காற்றழுத்தம் இலங்கைக்கு வெள்ள அபாயம்

## காலநிலை குறித்து முன்னெச்சரிக்கை

(கொழும்பு)
தெற்கு வங்கக்கடலில் புதிதாக உருவாகியுள்ள காற்றழுத்தம் காரண மாக, இலங்கையிலும் தென்னிந் தியாவிலும் வெள்ள ஆபத்து ஏற் படலாம் என்று காலநிலை தொடர் பான இணையத்தளம் முன்னெச் சரிக்கை விடுத்துள்ளது.

வங்கக் கடலில் இலங்கைக்கு கிழக்கே உருவாகியிருக்கும் இந்த காற்றழுத்தம், தீவிரம் பெற்று, இலங்கை மற்றும் தென்னிந்தி யாவை நோக்கி நகரும் என்று எதிர பார்க்கப் 23ஆம் பக்கம் பார்க்க....

# தமிழ் மக்கள் உணர்வுபூர்வமாக ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பு

## நன்றி தெரிவிக்கிறது த.தே.ம.மு

(யாழ்ப்பாணம்)
வடக்குக் கிழக்கில் பணிப்புறக் கணிப்பு போராட்டம் வெற்றிபெற ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்ப தாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நீண்டகாலமாக விடு தலையின்றி அரசியல் கைதிகளாக சிறையில் வாடும் தமிழ் இளைஞர் கள் நல்லாட்சி அரசு என்று கூறும் அரசாங்கமும் தமது விடுதலைக்கு எந்த நட வடிக்கையையும் எடுக் 24ஆம் பக்கம் பார்க்க....


**1 to 1 Free**
20.11.2015 வரை மட்டுமே
ஒரு லார்ஜ் பீற்சாவிற்கு ஒரு சிறிய பீற்சா இலவசம்
Take away
Dining
Delevery
Available
நாகரீகமான சூழலில் குடும்பத்துடன் உண்டு மகிழ
பிறைட் ரைஸ் 20% விலைக்கழிவு
**Village Style Restuarant**
128, Palaly Rd, Thirunelveli.
(C-2718) © 021 22 16 700


## பிரதமர் சிங்கப்பூருக்கு திடீர் பயணம்

(கொழும்பு)
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை திடீரென சிங்கப் பூருக்குப் புறப்பட்டுச் சென்றிருப் பது கொழும்பு அரசியல் வட்டாரங் களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

அவசர மருத்துவ பரிசோதனை ஒன்றுக்காகவே அவர் சிங்கப்பூர் சென்றுள்ளதாக பிரதமரின் செயல கப் பேச்சாளர் ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் அவரது மனைவி மைத்ரி விக் கிரமசிங்க 24ஆம் பக்கம் பார்க்க....

# 'சுமந்திரன் எம்.பிக்கு பதிலடி கொடுப்பேன்'

## முதலமைச்சர் சீற்றம்

(யாழ்ப்பாணம்)
என்னை கட்சியிலிருந்து நீக்கப் போவதாக கூறிய பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு தக்க பதில் வழங்க தான் தயாராகிக் கொண்டு உள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்



திரன் அண்மையில் அவுஸ்திரே லியா சென்றபோது அங்குள்ள வானொலி ஒன்றிற்கு, முதலமைச் சர் விக் 24ஆம் பக்கம் பார்க்க....

# விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் இந்.அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

இலங்கையில் விடுதலை செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 126 பேர் இந்திய அதிகாரிகளிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடல் எல்லையில் இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரிடம் இந்திய மீனவர்கள் கையளிக்கப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் அக்ரம் அலவி தெரிவித்தார்.

மன்னாருக்கு வடமேற்காக 48 மீனவர்களும், காங்கேசன்துறைக்கு வடக்கே 78 மீனவர்களும் இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

குறித்த தமிழக மீனவர்கள் 126 பேரும் கடந்த காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பினுள் பிரவேசித்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த மீனவர்கள் யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் புத்தளம் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தீபாவளியை முன்னிட்டு நல்லெண்ணத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர். (எ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி
**சிவானந்தன் சிந்துஜா**
**(HNDA)**

13-11-2015 நேற்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செல்வி சிவானந்தன் சிந்துஜா அவர்கள் உயர் தேசிய கணக்கியல் பட்டப்படிப்பு (HNDA) பட்டத்தை பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பட்டங்களை பெற்று நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
கோப்பாய்.

சித்தாவை வாழ்த்துவோர்
சௌத்ஜன்
சௌத்ரிதன்
பட்டுக்குட்டி

(2297)



## January 9th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

# IELTS

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YOU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IS AN INNOVATIVE TRINING PROGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 &8.5

9th January 2016 யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை நடைபெறும்.



**IELTS பாடங்களை படிப்பிக்கும் அதே வேளை Grammar and Vacabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.**

**வகுப்புக்கள் ஆரம்பம் 16.11.2015**

### COURSE SCHEDULE

| Mon, Tues, Wed, Thur | Saturday & Sunday |
|---|---|
| 50 Hours | Duration 50 Hours |
| 8.30 - 10.30 , 5.00 - 7.00 | Time 8.30 - 11.00 |

நீங்கள் U.Kயில் திருமணம் செய்திருந்தால் Visa பெறுவதற்கு British Council லினால் மாதம் ஒருமுறை நடத்தப்படும் IELTS - Life skills பரீட்சையில் சித்தி பெறவேண்டும். ஒரே தடவையில் சித்தியடைந்து B-1 பரீட்சையும் எடுக்கும் அளவுக்கு எமது போதனைகள் அமைகின்றன

# IELTS LIFE SKILLS A1

கடந்த காலங்களில் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் City and Guild பரீட்சைக்கு எமது கல்லூரியில் இருந்து தோற்றி 100% பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள். அதே போன்று இப்பொழுதும் IELTS Life Skill பரீட்சைக்கு தோற்றி பல மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

*இன்றே எமது வகுப்புகளில் சேர்த்து பரீட்சையில் சித்தியடையுங்கள்*

## BRITISH COLLEGE OF ENGLISH

No 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 தொ.பே : 0778803887

(சி-2710)


## The Association for Health and Counselling "Shanthiham"
## Registration of Suppliers for goods and services for the year 2016

Applications are invited from reputed suppliers, manufactures, Importing Agents, other business Organizations and Contractors who wish to register themselves with the Association for health and Counselling "Shanthiham" for supply of goods and services listed below for the year 2016

**CONDITIONS**

i. Applicants should pay Rs.1000/- as registration fee by way of Cash or Bank draft and obtain application forms during office hours from Finance branch.

ii. Separate application should be forwarded for each category.

iii. Completed application forms should be forwarded under registered cover or by hand to the following address on or before **3.00P.M 22.12.2015** and marked on left hand corner of the envelop as **"Registration of Suppliers -2016**

iv. Quotation for supply of goods and services will normally be called from the list of registered Suppliers, However the ACH- Shanthiham reserves the right to invite quotations from non registered suppliers also necessary.

v. The AHC- Shanthiham reserves the right to accept or reject any application sent for registration.

**vi. Application forms could be obtained on or before 3.00 PM 21.12.2015**

| Supplies | Services |
|---|---|
| 1. All kinds of stationery items | 1. Repair and maintenance of office equipments |
| 2. Computers, Servers, Printers, UPS, Scanner etc; etc; | 2. Repair and servicing Computers, UPS, Printers etc: |
| 3. Office equipments Fax Machine, photo copier etc: | 3. Repair and maintenance of office Building |
| 4. Training equipments Multimedia, Overhead projector, Digital video camera etc: | 4. Servicing and repair Electronic items Camera etc |
| 5. Office Furniture Timber/steel | 5. Repair and maintenance of steel furniture's |
| 6. Motor vehicles Spares, Tyres &Tubes batteries etc | 6. Repair and servicing of Motor vehicles Vans, Motor Bicycles etc; |
| 7. Electrical & Electronic items | 7. Repair and maintenance of power lines and other electrical installations |
| 8. Zanitorial items Harpic, teepol & liquids | 8. Zanitorial services |
| 9. Computer stationeries Toner, Pen drives, cartridges | 9. Printing work |
| 10. Household items | 10. Hiring of vehicles Buses Vans & Autos Etc |
| 11. Water bottles | 11. Security services |
| 12. Food items Lunch, Short eats etc: | 12. Plumbing works & plumbing items |

**Executive Director**
**AHC - Shanthiham**


**Address:-**
**Association for health and Counselling" Shanthiham**
**8, 8/1, Katpagavinayagar lane,**
**Off Kachcheri Nallur Road, Jaffna.**

(C-2714)


# பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு



யாழ்.நகரப் பகுதி







சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யக்கோரி நேற்றைய தினம் வடக்கு கிழக்கு முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருந்தது.

அத்தியாவசிய சேவை நிறுவனங்களான வைத்தியசாலை உட்பட்ட சில நிறுவனங்கள் நேற்றைய தினம் பணியினை முன்னெடுத்திருந்தன.

யாழ்.மாவட்டத்திலும் இக் ஹர்த்தால் முழுமையாக அனுஷ்டிக்கப்பட்டிருந்தது. இதற்கு முஸ்லிம்களும் பூரண ஆதரவினை வழங்கியிருந்ததனை அவதானிக்க முடிந்தது.

**(படங்கள் உ.சாளின், சாவகச்சேரி செய்தியாளர்)**



யாழ்.பல்கலைக்கழகம்







சாவகச்சேரியில்



## அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி திருமலையில் ஹர்த்தால்

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு, கிழக்கு பகுதியில் நேற்று பூரண ஹர்த் தால் அனுஷ்டிக்கப்பட்டு வரு கிறது.

கடந்த சில நாட்களாக சிறைக்கைதிகளால் முன்னெடுக்கப்பட்ட உண்ணா விரதப் போராட்டமானது ஜனாதிபதியின் தலையீட்டினை அடுத்து கைவிடப்பட்டது. எனினும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் எந்தீ விதமான தீர்க்கமான முடிவும் எடுக்கப்படாத நிலையில் சட்ட ரீதியான நிர்வாக ரீதியான செயன்முறைகளின மூலமாக குறித்த கைதிகள், பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப் [illegible] வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து நேறறு காலை முதல் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-10)

## மட்டு.மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், பாடசாலைகள், பொதுச்சந்தைகள் உட்பட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன எனவும் வீதிகளில் மக்கள் நடமாட்டமின்றி காணப்பட்டன.

மேலும் பாதுகாப்பு கடமைகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியே தமிழ் தேசிய கூட்டமைப்பு இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்துள்ளதாக கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்தார்.(இ-10)

## வெலே சுதாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

வெலே சுதா உட்பட 8 பேருக்கு எதிரான பணச்சலவை வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெலே சுதா உட்பட 8 பேருக்கு எதிரான பணச்சலவை வழக்கில்விபரமான அறிக்கையை நீதிமன்றத்தில்சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் கியான் பிலப்பிட்டிய குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸாருக்கு நேற்று உத்தர விட்டார்.

வங்கிகளில் தகவல்களை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக விசாரணைகளிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்கள பொலிஸார் தெரிவித்தனர். (எ-11)

# கடும் நிபந்தனையுடனான பிணை முழுமையான விடுதலை அல்ல!

## நீதியமைச்சு விளக்கமளிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களில் பாரதூரமான குற்றச்சாட்டு சுமத்தப்படாதவர்கள் கடும் நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டபோதிலும், அது முழுமையான விடுதலையல்லவென நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான வழக்குகளின் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற விசாரணைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சுமார் 60 பேரை நீதிமன்றத்தின் ஊடாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக் நீதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்களை விடுவிப்பதை பாரதூரமான குற்றமாக அர்த்தம் கற்பிக்க சிலர் முற்படுகின்றபோதிலும், சந்தேகநபர்கள் தொடர்பில் உண்மையான நிலையை நாட்டு மக்களுக்கு மிகவும் தெளிவாக அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளதாக நீதியமைச்சு கூறியுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது நேரடியாக யுத்தத்தில் ஈடுபட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் உறுப்பினர்கள் அரச படையினரிடம் சரணடைந்ததுடன், அவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டதாகவும் நீதியமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இரண்டாம் நிலை தலைவராகக் கருதப்பட்ட நபர், கடந்த அரசாங்கத்தில் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தமை நாட்டு மக்கள் அனைவரும் நன்கறிந்த விடயமாகும் என நீதியமைச்சர் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் மிகவும் பாரதூரமான குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்ட 140 பேரை, 2010 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் 22 ஆம் திகதியன்று அப்போதைய சட்டமா அதிபரான மொஹான் பீரிஸின் பணிப்புரைக்கமைய விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், தற்போதைய அரசாங்கம் மீது குற்றஞ்சாட்டுகின்ற தரப்பினருக்கு நினைவூட்ட வேண்டியுள்ளதாகவும் நீதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச ரீதியாக நாட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள பாரதூரமான குற்றச்சாட்டுகளை சமநிலைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் நீதியமைச்சு கூறியுள்ளது.

அத்துடன், நாட்டில் இனங்களிடையே நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற ஒரு சூழ்நிலையில், இந்த விவகாரம் தொடர்பில் திரிபுபடுத்தப்பட்ட விடயங்களைக் கூறி மக்களை திசை திருப்புவதற்கு முற்படுகின்றமை, மீண்டும் நாட்டில் இனங்களிடையே அமைதியின்மை மற்றும் அதிருப்தி ஏற்பட இடமளிப்பதாக அமைந்துவிடும் என்றும் நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து தரப்புகளும் மிகவும் பொறுப்புடன் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்து செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என நீதியமைச்சர் வலியுறுத்தியுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (எ-11)

# மரண அறிவித்தல்கள்



## சே.பாலசுந்தரம்

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன இலாகா ஓவசியர்)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் அவர்கள் கடந்த 11.11.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.11.2015) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருவதுடன், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் :
குடும்பத்தினர்,
அல்வாய் வடக்கு.

தொலைபேசி இல:
021 320 2796

(சி-2719)

## ஞானப்பிரகாசம் ஜெயராஜா

(ஓய்வுநிலை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்)



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட

ஞானப்பிரகாசம் ஜெயராஜா (ஓய்வுநிலை விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்)

13-11-2015 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம் -அக்கினேஷ் தம்பதிகளின் புதல்வனும், டெய்சிமலர் மேரியின் அன்புக் கணவரும் மேரி ஜெயசிங்கி, காலஞ்சென்ற கிறிஸ்தோப்பர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணரட்ணம், காலஞ்சென்ற கிறேஸ் சுகணமலர், ஞானப்பிரகாசம் (சுவிஸ்), காலஞ்சென்ற விஜயரட்ணம், ஜோன் மேரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கிறிஸ்ரி சுதர்சன், ஜோய் சுரேந்திரன் (ஆசிரியர்-யா/மாதகல் சென்.யோசவ் மகா வித்தியாலயம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜேன் தமயந்தியின் (ஆசிரியை-பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) அன்பு மாமனாரும், சனோஜனனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 14.11.2015 இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று சீரிபல்லி கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மலர்மனை"
கேணியடி,
கரவெட்டி.

தகவல் :-
சுரேந்திரன் (மகன் )
T.P 021 226 1089

(C-2717)

# கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல்கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்த அமைப்பின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை முழுமையாக விடுதலை செய்யுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்த அதேவேளை முதற்கட்டமாக 31 பேருக்கு பிணை வழங்கப்பட்டது.

ஆனாலும் அவர்களுக்கு பிணை வழங்குவதற்கு எவரும் முன்வராத காரணத்தினால் அவர்கள் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச செல்லப்பட்டனர்.



இந்த நிலையில் நேற்று காலை இரண்டு கைதிகளுக்கு பிணை வழங்குவதற்கு உறவினர்கள் முன்வந்ததால் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (எ-11)

# 15 இலட்சம் கடவுச்சீட்டு நிதி அமைச்சு விசாரணை

(கொழும்பு)

5 இலட்சம் கடவுச்சீட்டுக்களுக்கு பதிலாக 15 இலட்சம் கடவுச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

ஐந்து இலட்சம் கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு நிதி அமைச்சு அனுமதியளித்திருந்தது.

எனினும், பதினைந்து இலட்சம் கடவுச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் குறித்து நிதி அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பத்து இலட்சம் கடவுச்சீட்டுக்கள் மேலதிகமாக அச்சிடப்பட்டமையினால் ஒன்றுக்கு 670 ரூபாய் என்ற அடிப்படையில் 670 மில்லியன் ரூபாய் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு அச்சிடுவதற்கு வடமேல் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சர் ஒருவர் பூரண அனுமதியளித்திருந்தார் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதும் நிதி அமைச்சருக்கும் குறித்த அமைச்சருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 2017-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு 5 இலட்சம் கடவுச் சீட்டுக்கள் தேவைப்பட்ட போதிலும் மேலதிகமாக 10 இலட்சம் கடவுச்சீட்டுக்கள் அச்சிடப்பட்டமையினால் அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (எ-11)



சிறையிலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி வடக்கு கிழக்கு நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவாக யாழ்.மாவட்டத்திலும் பல இடங்களில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: கரணவாய், தும்பளை செய்தியாளர்கள்)

# அவன் கார்ட் விவகாரத்தில் ஜனாதிபதியின் தலையீடு பிழையான முன்னுதாரணமாகும்

(கொழும்பு)

**அவன் கார்ட் விவகாரத்தில் ஜனாதிபதி தலையிட்டமையானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தையே வலியுறுத்தி நிற்பதாக மனித உரிமை மற்றும் ஆய்வு நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

அவன் கார்ட் விவகாரத்தில் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தலையீடு செய்ய நேரிட்டதாகத் தெரிவித்துள்ள அவர், இவ்வாறு ஜனாதிபதி குறித்த வவகாரத்தில் தலையீடு செய்தமை தொடர்ந்தும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் அவசியத்தையே வலியுறுத்தி நிற்பதாகத் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்கள் கொள்கை வகுப்பு மற்றும் அமுல்படுத்தல்களில் தலைமையேற்க வேண்டுமென வலியுறுத்திய அவர் இவ்வாறான விவகாரங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தலையீடு செய்வது பிழையான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

கொள்கைகளை அமுல்படுத்தும் நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டுமெனவும் பிரச்சினைகளுக்கு அரச நிறுவனங்கள் சுயாதீன தீர்மானங்களை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

## 80 வயது தாய் 15 வருடங்கள் பாழடைந்த வீட்டில்

எண்பது வயதுடைய மூதாட்டியான தாயை 15 வருடமாக வீட்டுக்குள் அடைத்து வைத்திருந்த இரகசிய சம்பவம் இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது. சொத்து தகராறினால் ஏற்பட்ட பிளவையடுத்து 5 பிள்ளைகளும் இந்த படுபாதக செயலைப் புரிந்துள்ளனர். சியம்பலாண்டுவ பிரதேசத்தில் இக் கொடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக தெரியவருவதாவது,

தாய், தந்தை, இரு மகன்மார்கள். 3 மகள்மார்கள் உட்பட 7 பேர் கொண்ட குடும்பத்தில் 80 வயதுடைய தாயின் பெயரிலே அனைத்து சொத்துக்களும்இருந்துள்ளன.

இந்தநிலையில் இவருடைய கணவன் இறந்து 28 வருடமாகிவிட்டது. இதன் பின்னர் தாயின் பெயரில் இருந்த அனைத்து சொத்துக்களையும் 5 பிள்ளைகளும் பங்கிட்டு தம்வசப்படுத்திக் கொண்டு தாயை கைவிட்டு விட்டனர்.

பின்னர் 5 பிள்ளைகளும் தாயை ஒவ்வொரு வருடம் பராமரிக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்கு வந்துள்ளனர். ஆனால் கடந்த 15 வருட காலமாக பாழடைந்த வீட்டில் அடிப்படை வசதிகள் அற்ற சுத்தமில்லாத அறையில் அடைத்து வைத்துக் கொடுமைப்படுத்தி உள்ளனர். இது குறித்து சியம்பலாண்டுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து இம்மூதாட்டி மீட்கப்பட்டு சியம்பலாண்டுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக பொலிஸார் அனுமதித்துள்ளனர்.

இது குறித்து சியம்பலாண்டுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(இ-10)

## மாகாணநிலை சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு இன்று

மாகாண நிலை சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா யாழ்.இந்துக் கல்லூரியில் இன்று காலை 9.30 மணிக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வு இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ளது. காலை அமர்வு காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பி.ப 12.30 க்கு நிறைவடையவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிர தம விருந் தினராக மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார்.

பிற்பகல் அமர்வு பி.ப ஒரு மணிக்கு ஆரம்பமாகி பி.ப 4.30 மணி வரை நடைபெறவுள்ளது. இதில் யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். காலை அமர்வில் ஆரம்ப பிரிவு, தமிழ் பாடம், அழகியல் பாடம், சிங்கள மொழி, மனைப்பொருளியல, உள சமூக , வாசக ஆக்கப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (இ)

## அம்பாறையில் ஹர்த்தால் இயல்பு நிலை ஸ்தம்பிதம்



(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை வேண்டி வடக்கு கிழக்கு பூராகவும் த.தே.கூட்டமைப்பு பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்ததனால் நேற்று அனைத்து பிரதேசங்களிலும் ஹர்த்தால் நடைபெற்றது.

இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தினை பொறுத்தவரையில் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக இருந்ததோடு போக்குவரத்துக்களும் குறைந்தளவிலேயே சேவையில் ஈடுபட்டிருந்ததோடு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டும், பிரயாணிகளின் நடமாட்டம் குறைவாகவும் இருந்தது. (இ-7-10)

## சுவிஸ் வங்கியிலிருந்து 450 மில்லியன் டொலர்கள் இலங்கை வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 450 மில்லியன் டொலர் பணம் இலங்கை வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.



சுவிட்சர்லாந்து வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணத்தை மீள இலங்கைக்கு கொண்டு வருமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கணக்கு உரிமையாளர்கள், இலங்கை வங்கிகளில் சுமார் 450 அமெரிக்க டொலர் பணத்தை வைப்புச் செய்துள்ளனர். இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் சுவிஸ் வங்கிகளில் வைப்புச் செய்திருந்த பணத்தை இலங்கை வங்கிகளில் வைப்புச் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

சவுதி அரேபியா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் வைப்பாளர்களது பணமும் இவற்றில் அடங்குகின்றது எனவும் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் முதலீடு தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.(இ-7-10

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி குமாரசாமி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை முதல்வர் ப.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சி.சிவநாதன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலைச்செல்வி சௌந்தரராஜன் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-12)

★ ★ ★ ★ ★ ★

(கரணவாய்)

யாழ்.அல்வாய் வடக்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும் ஓய்வுநிலைகிராம உத்தியோகத்தருமான கே.பரஞ்சோதி கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

★ ★ ★ ★ ★ ★

யாழ்.கரவெட்டி நெல்லியடி மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த பரிசில் தினம் நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் நடராசா தேவராசா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர் சிவசுப்ரமணியம் முகுந்தன், சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் சுந்தர் பொன்னையா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

★ ★ ★ ★ ★ ★

யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப10 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஜே.எ.தவநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன்,சிறப்பு விருந்தினர்களாகவடமாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.இராசலிங்கம், கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் எ.எஸ்.சற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை உதவிஅதிபர் த.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய முகாமைத்துவப் பிரதிப்பணிப்பாளர் பி.அருணகிரிநாதன் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவியும் சட்டத்தரணியுமான இ.ஞானலோஜினி கலந்து கொள்ளவுள்ளார்.(இ-5)



கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய சிறுவர் பாராளுமன்ற தேர்தல் யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கமைய மாணவர்கள் மத்தியில் ஜனநாயக செயற்பாடுகளை வலியுறுத்தும் வகையில் எதிர்காலத்தில் ஜனநாயக செயற்பாடுகளில் மாணவர்கள் சரியான முறையில் ஈடுபடும் நோக்குடன் இத்தேர்தல் பாடசாலை மட்டத்தில் வலயக்கல்வி அலுவல்கள் ஊடாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## சதுர்த்தி

யாழ்.வண் வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-5)

## சிறப்பு சொற்பொழிவு

வல்வை திருவில் வயலூர் முருகன் ஆலயத்தில் கந்த சஷ்டி விரதத்தை முன்னிட்டு இன்று பி.ப 4.30 மணியளவில் பண்டிதரும் சைவப் புலவருமான பொன்.சுகந்தன் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (இ-7)




## மாணவர்களுக்குரிய இறுதிப்பரீட்சை வணிகத்துறை பரீட்சை மண்டபத்தில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் 2014/ 2015 கல்வியாண்டு மாணவர்களுக்குரிய இறுதிப் பரீட்சை இன்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வளாக வீதியில் உள்ள வணிகத்துறைசார் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## மாநகர சபை வரியிறுப்பாளர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநாகர சபை வரியிறுப்பாளர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்குவதற்கான கலந்துரையாடலும், சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்யும் கலந்துரையாடலும் அங்குரார்ப்பண நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு இலக்கம் 121, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நடைபெறவுள்ளது.

சிந்தனைக்கூடம்-யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் இதற்கான அழைப்பை விடுத்துள்ளார். ஆர்வலர்களை இதில் கலந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (இ-3)

## போக்குவரத்து விதிமுறைகள், வீதிவிபத்துக்களை தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண போக்குவரத்து அமைச்சு,ஆசிய அபிவிருத்தி வங்கி,வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பன இணைந்து வடமாகாணத்தில் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்து சேவை என்பவற்றின் சாரதிகளிற் கான பயிற்சிகள்,பாடசாலை ஆசிரியர்கள் ,மாணவர்கள் ,மாவட்ட செயலகங்கள் ,பிரதேச செயலகங்கள்,மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களைத்தடுப்பது தொடர்பான கருத்தரங்குகளைதொடர்ச்சியாக நடத்தி வருகின்றது.

இக்கருத்தரங்குகளில் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படுவதுடன் போக்குவரத்து விதிமுறைகள்,வீதிசைகைகள் தொடர்பான கையேடுகளும் வழங்கப்பட்டு வருகின்றது. வீதி விபத்துக்கள் எவ்வாறு நடைபெறுகின்றன? அவற்றை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் வளவாளர்களினால் உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக வடமாகணத்தில்முகாமைத்துவத்துறையில் கடமையாற்றும் உயர்மட்ட அதிகாரிகளிற்கு போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதிவிபத்துக்களைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்றினை எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை கிறீன்கிராஸ் ஹோட்டலில் நடத்துவெதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக்கருத்தரங்கில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக, வாணிப, கிராம அபிவிருத்தி,வீதி அபிவித்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண பிரதம செய லாளர் அ.பத்திநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் வளவாளர்களாக ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் த.பேரின்பநாயகம், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் எப்.ஜோன்சன், யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஓய்வு நிலை உதவி ஆணையாளர் ஆர்.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் சு.மெய்கண்டானினால் கடந்த காலங்களில் மேற்கொள் ளப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்குகள் தொடர்பான மீள்பார்வையும் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் அரசாங்க அதிபர்கள், மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள் உட்பட போக்குவரத்து துறைசார் உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டவர்கள் அதில் கலந்து கொள்வதுடன் எதிர்காலத்தில் போக்குவரத்து தொடர்பாகவும் வீதிவிபத்துக்களை தடுப்பது தொடர்பாகவும் வடமாகாணத்தில்மேற்கொள்ளப்படும்வேலைத் திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறும் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக,வாணிப,கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார்போக்குவரத்து அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ

## இறுவெட்டு,ஆவணப்படம் வெளியீட்டு விழா நாளை

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சைவ ஆலோசனைச் சபையின் சிவநெறி இறுவெட்டு மற்றும் கரகம் ஆவணப்படம் வெளியீட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை கரவெட்டி பிரதேசசெயலக மகாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபை தலைவர் மற்றும் பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில் நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5-60)

## இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கைதடி வள்மதி கல்வி நிலையமும் இளைஞர்கழகமும் இணைந்து நடத்தும் தரம்-9 மாணவர்களுக்கான மா காண மட்ட பொதுப்பரீட்சையை முன்னோக்கிய முன்னோடி இலவச கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் காலை 9மணிக்கு இடம்பெறும்.

இக்கருத்தரங்கில் விஞ்ஞான பாடவளவாளராக ஆசிரியர் மு.பிரியந்தன் கலந்து கொள்வதுடன் கணிதபாட வளவாளர்களாக ஆசிரியர் நா.கஜேந்திரன்,ப.சுரேஸ் மற்றும் பண்டாரவளை உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மதியழகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## யாழில் நீரிழிவு தினத்தை முன்னிட்டு ஆயிரம் தென்னங்கன்றுகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்திலுள்ள பொது இடங்களில் ஆயிரம் செவ்விளநீர் தென்னங்கன்றுகள் நடுகை திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன்சுதன் தெரிவித்து ள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டு வருகின்றோம்.

அந்தவகையில் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினூடாக நீரிழிவு நோய் தொடர்பான 5நூல்களை வெளியிட்டுள்ளோம்.15இற்கு மேற்பட்டவிழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை இதுவரை நடத்தியுள்ளோம். அத்துடன் 7ஆயிரத்து 500 ஜம்பு கன்றுகளை யாழ்.மாவட்டத்தில் பொது இடங்களில் நாட்டியுள்ளோம்.

இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக இம்முறை ஆயிரம் செவ்விளநீர் தென்னங்கன்றுகளை நடுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.செயற்கை மென்பானங்கள் அதிகளவில் பயன் படுத்துவதே நீரிழிவு நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றது. எனவே இயற்கையான உணவுக்களை உண்பதற்கு பொது மக்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாக இதை ஆரம்பித்துள்ளோம்.

பொது இடங்களில் செவ்விளநீர் தென்னங்கன்றுகளை நாட்ட விரும் புபவர்கள் மற்றும் நீரிழிவு நோய் தொடர்பான நூல்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ். போதனா வைத்திய சாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் 021 2220179 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு தெரியப் படுத்தும் பட்சத்தில் பாடசாலைகள், சன சமூக நிலையங்கள், கோவில்கள் போன்ற பொது இடங்களுக்கு வருகை தந்து செவ்விளநீர் தென்னங்கன்றுகள் நாட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சொற்பொழிவு

கந்தசஷ்டி விரத கால கந்புராண தொடர் சொற்பொழிவு நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணிவரை தினமும் நடைபெற்று வருகிறது.

இச் சொற்பொழிவினை யாழ்ப்பாணம் சின்மயா மிஷன வதிவிட ஆச்சாரியார் பிரம்மசாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் தினமும் நிகழ்த்து வருகின்றார். எதிர்வரும் 18ஆம் திகதி புதன்கிழமை வரை இச் சொற்பொழிவு இடம்பெறும். (இ-5)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

கொட்டடி சித்தி விநாயகர் ஆலய வருடாந்த ஆண்டிறுதிப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கோவில் மண்டபத்தில் இடம் பெறும். (இ

## உற்சவகால மாற்றுப்பாதை தொடர்பான அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கந்தசஷ்டி உற்சவ காலச் சுவாமி வீதி உலா மற்றும் சூரசங்கஹார நிகழ்வுகளை முன்னிட்டு ஆலயச் சூழலினூடாக வாகனப் போக்குவரத்து தொடர்பாக யாழ்.மாநகர சபை ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போக்குவரத்துத் தடையானது எதிர்வரும் 18ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15ஆம் திகதியும் 18ஆம் திகதியும் பிற்பகல் 4மணி தொடக்கம் இரவு7மணி வரையும் 16ஆம் திகதி,17ஆம் திகதிகளில் நண்பகல் 12மணி தொடக்கம் இரவு 7மணி வரையும் இவ்வீதித் தடை இடம்பெறும்.

அத்துடன் மாநகர சபையால் அறிவிக்கப்பட்டுள்ள வாகனப் போக்குவரத்து தொடர்பான அறிவித்தல் வருமாறு,

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கும் செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து வண்டிகளும் தனியார் பேருந்துவண்டிகளும் முத்திரைச் சந்தி ஊடாக நல்லூர் குறுக்கு வீதியினை அடைந்து அதனூடாக நாவலர் வீதியினை அடைந்து ஆனைப்பந்தி சந்தியினூடாக பருத்தித்துறை வீதியினை அடைந்து யாழ்ப்பாணம் செல்லவும் அது போன்று யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பேருந்து வண்டிகளும் இதே வீதி ஒழுங்கினை கடைப்பிடிக்குமாறும் கேட்டுக்கொள்வதுடன் ஏனைய வாகனங்கள் செட்டித்தெரு வீதி, சங்கிலியன் வீதி, கோவில் வடக்கு வீதி ஆகிய வீதிகளை பயன்படுத்தி போக்குவரத்தினை மேற்கொள்ளுமாறும் கோவில் சூழலில் வாகனங்களை தரித்து வைப்பதனை முற்றாக தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (இ-5)

# கிளிநொச்சியில் பெண்களின் மேம்பாட்டிற்கான தேசிய நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது



(மல்லாவி)

பெண் தலைமைதாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களின் மேம்பாட்டிற்கான தேசிய நிலையம் நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கிளிநொச்சிக்கு வருகை தந்த பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார மேற்படி நிலையத்தினை திறந்து வைத்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்திற்கு அருகில் மேற்படி நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம்ஜனவரிமாதம் கிளிநொச்சி வருகைதந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாவட்டச் செய லகத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின் போது பெண்களின் நலன்களை அடிப்படையாக கொண்டு அவர்களின் முன்னேற்றத்திலும், பாதுகாப்பிலும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தேசிய நிலையம் ஒன்றினை கிளிநொச்சியில் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்திருந்தார்.

அந்த வகையில் நேற்றைய தினம் குறித்த நிலையம் அமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட சில பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிலையத்தின் ஊடாக பெண் தலைமைதாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலும் மேற்படி நிலையத்தினால் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் குறித்த நிலையமானது தேசிய நிலையம் என்பதனால் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த பெண் தலைமை தாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களின் விடயங்கள் இங்கு கையாளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள், கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் பிரதேச செயலாளர்கள் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-15)

# மனிதவள அபிவிருத்தி தொடர்பில் தாய்லாந்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



(கொழும்பு)

நாட்டின் மனிதவளங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் இலங்கைக்கும் தாய்லாந்துக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை கைச்சாத்திடுவது தொடர்பாக அரசாங்கம் தீர்மானத்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், இருநாடுகளுக்குமிடையிலான பரஸ்பர நட்புறவுக் கொள்கையானது மனிதவளங்களை அபிவிருத்தி செய்வதில் முக்கிய பங்கினை வழங்குகிறது எனவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்திற்கும் தாய்லாந்து அரசாங்கத்திற்கும் இடையில் இருதரப்பு தொழில்நுட்ப ஒத்துழைப்பானது இலங்கையின் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்கியுள்ளது.

தாய்லாந்து சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனத்தின் (TICA) ஊடாக மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் வேலைத்திட்டம் 2015 - 2019 ஆகிய காலப் பகுதிக்குள் இலங்கைக்கு வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஐந்து வருட புரிந்துணர்வு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் விவசாயம், சுகாதாரம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மற்றும் தன்னிறைவுப் பொருளாதாரம், சுற்றுலாத்துறை முகாமை மற்றும் இராஜதந்திர துறையில் பயிற்சி போன்ற துறைகளிலேயே இப் பயிற்சி நெறி வேலைத்திட்டம் வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் இரு நாடுகளுக்குமிடையில் தொழில்நுட்ப ஒத்துழைப்பினை விருத்தி செய்யும் நோக்கில் தாய்லாந்து அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சர் எனும ரீதியில் பிரதமர் ரணில் விக் கிரமசிங் கவினால் கொண்டு வரப்பட்ட அமைச்சரவை யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)


# மரண அறிவித்தல்



**அமரர் கந்தையா தர்மபாலன்**

(உரிமையாளர் LUXON Communication ஈச்சமோட்டை )

காரைநகர் பொன்னாவளை களபூமியைப் பிறப்பிடமாகவும் இல. 60, ஈச்சமோட்டை யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மபாலன் 13.11.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-மாரிமுத்து தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விமலராஜன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற விமலரூபன் மற்றும் விமலாகரன் (லண்டன்), விமலசாந்தன் (LUXON Communication), விமலக்ஷன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாரூபி (அவுஸ்திரேலியா), சிவவதனி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விதுசனின் (அவுஸ்திரேலியா) அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்வராஜா (மாத்தையா) மற்றும் இராஜரட்ணம் (லண்டன்), துரைராசா (லண்டன்), திருமதி ஜெயந்திரன் ஜெயசோதி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15.11.2015 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது ஈச்சமோட்டை இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(2295)

இல. 60, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 7913,
077 411 5335 விமலசாந்தன் (மகன்)

தகவல்:
மனைவி-சரஸ்வதி,
பிள்ளைகள், மருமக்கள்


# ராசி பலன்

14.11.2015
(ஐப்பசி 28, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00மணிக்கு,
திருதியை பின்னிரவு 1.51மணிவரை
கேட்டை மாலை 6.46மணிவரை
இராகுகாலம் 9.07-10.37மணிவரை
சுபநேரம் 3.07-4.37 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பரணி, கார்த்திகை<br>இரவு 6.42இற்கு<br>தனு-சந் | | |
| | | | குரு |
| | சனி, சந்<br>புத | சூரி | ராகு<br>செவ்<br>சுக் |

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மேடம்** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினிடையே மனம் விட்டுப் பேசுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள், பகைவர்கள் விலகுவர், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், தொழில் நலன்கருதிய திட்டங்கள் வெற்றி பெறும், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** சொத்துக்களால் ஆதாயமுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தேக நலனில் முன்னேற்றமுண்டு.

**மகரம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் வளர்ச்சி காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, தாய் வழி உறவில் அனுகூலமுண்டு.

**தனுசு** நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும்.

**துலாம்** புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**கன்னி** எடுத்த செயலை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

# விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட மானிய உர விநியோகம்

## துணுக்காய் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவிப்பு

(மல்லாவி)

**துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்ப்பாசனக் குளங்களான மருதங்குளம், மல்லாவிக்குளம், கோட்டைகட்டிய குளம், ஆகியவற்றிற்குட்பட்ட கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கும் வவுனிக்குளம் நீர்ப்பாசனத்தின் கீழுள்ள யோகபுரம் கிழக்கு, புகழேந்தி நகர், சாளம்பன் , திருநகர் ஆகிய கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகளுக்கும் இரண்டாம் கட்ட மானிய உர விநியோகம் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.**

மானிய உர விநியோகமானது , எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை துணுக்காய் கமநல சேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படுமென துணு க்காய் க ம நலசேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படும் என துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும் பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். இதுதொடர்பில்அவர்தெரிவிக்கையில்,

மேற்படி கமக்கார அமைப்புகளுக்குட்பட்ட விவசாயிகளில் 2015-2016 ஆம் ஆண்டு கால போக நெற்செய்கைக்குரிய விதைப்பபை மேற்கொண்டவர்களுக்கும் மற்றும் அணைக்கட்டு சிரமதானம், பிரதான கால்வாய் மற்றும் கிளைக் கால்வாய் ஆகியவற்றின் துப்புரவு பணிகளை மேற்கொண்டவர்களுக்கும் தரைப் பண்படுத்தல் வேலைகளை மேற்கொண்டு நெல் விதைப்பை மேற்கொள்ள ஆயத்தமாகவுள்ள விவசாயிகளுக்கும் இரண்டாம் கட்ட மானிய உரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

மூன்றாம் கட்ட உர விநியோகமானது கொழும்பிலிருந்து மானிய உரம் எடுத்து வரப்பட்ட பின்னரே வழங்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# ஐக்கிய நாடுகள் குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம்; காணாமற் போன உறவுகளிடம் வாக்குமூலம் பதிவு





காணாமற் போனோர் தொடர்பாக ஆராயும் ஐ.நா.செயற்குழு நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள எட்டு மாவட்டங்களை சேர்ந்த காணாமற போனோரின் உறவுகளை அவர்கள் சந்தித்தனர். குறித்த பகுதிக்கு ஐ.நா. செயற்குழுவினர் விஜயம் மேற்கொண்டபோது, காணாமற் போனோரின் படங்கள் காட்சிப்படுத்தப்பட்டதுடன், காணாமற் போனோரின் உறவினர்கள் தமது உறவுகளை மீட்டு தருமாறு கூறி கவனயீர்ப்பு போராட்டத்தினையும் மேற்கொண்டிருந்தனர்.

மேற்படி குழுவினர் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்ட படங்களை பார்வையிட்டதன் பின்னர், மக்களுடன் கலந்துரையாடினர். தமது ஆதங்கங்களை வருகை தந்திருந்த குழுவினரிடம் காணாமற் போனோரின் உறவினர்கள் வெளிப்படுத்தினர்.

நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள்,

வருகை தந்துள்ள குழுவினர் தமது பிரச்சினைகளை கேட்டறிந்ததாகவும், சில ஆலோசனைகளை முன்வைத்ததாகவும் குறிப்பிட்டதுடன், அவர்கள் தமது உறவுகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை தமக்கு உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.இதேவேளை சர்வதேச விசாரணையில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த பகுதிக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படாததுடன், இனம் தெரியாத நபர் ஒருவரினால் இடையூறும் விளைவிக்கப்பட்டது. (2-15)

# வடமாகாண பாடசாலைகளில் மர நடுகையை மேற்கொள்க

## கல்வி அமைச்சின் செயலாளர் வலியுறுத்து

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச்சிற்குட்பட்ட அனைத்துப்பாடசாலைகளிலும் நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை பயன்தரும் மரக்கன்றுகளை நாட்டி நாட்டிற்கும் மண்ணிற்கும் வளம் சேர்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் நவம்பா மாதம் முதலாம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை மர நடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இச் செயற்பாட்டில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள அனைத்து பாடசாலைகளும் இணைந்து கொண்டு மர நடுகையை மேற்கொள்ள வேண்டும்.

இதற்குரிய மரக்கன்றுகளை கொள்வனவு செய்வதற்கு பாடசாலை நிதியிலிருந்து 2 ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாமல் பெற்றுக் கொள்ள முடியும்.

இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதற்கமைய மரக்கன்றுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் கூடுகள் அமைத்தல், தொடர் பராமரிப்பு, மரநடுகை செயற்றிட்டம் தொடர்பாக காலை ஒன்று கூடலின் போது சிறிது நேரம் மாணவர்களுக்கு மரநடுகையின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் கருத்துப் பகிர்வை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் கொண்டு ஒழுங்கமைத்தல்.விளம்பரக் காட்சிப் படுத்தும் பதாகைகளுக்கு வாசகங்களை கல்வி அமைச்சின் ஊடாகப் பெற்று காட்சிப்படுத்துதல்.

ஆகிய விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# அரசியல் கைதிகளின் விடுதலையில் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

அரசியல் கைதிகளின் விடுதலையில் முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் காணப்படுவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்பு விழா மற்றும் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்திய அவர், வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் இன்று முக்கிய பிரச்சினையாக உள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் காணப்படுகின்றன.

இந்த நாட்டில் 30 வருடங்களாக யுத்தம் நடந்து தற்போது 6 வருடங்களாக சுமுகமான சூழ்நிலை வந்துள்ளது. ஆகவே சுமுகமான நிலையில் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.

அரசியல் கைதிகளின் விடுதலையை நாம் முற்றுமுழுதாக வலியுறுத்துகின்றோம். அவர்கள் நிச்சயமாக வெளியில் வர வேண்டும்.

வடக்கை சேர்ந்தவர்கள் என்றால் என்ன, கிழக்கை சேர்ந்தவர்கள், மலையகத்தை சேர்ந்தவர்கள் என்றால் என்ன, அவர்களும் இந்த நாட்டின் மனிதர்கள் என்ற வகையில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பொது மன்னிப்புத்தான் என்று கூறவில்லை. எனினும் ஏதேனும் ஒரு வகையில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராசா, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வவுனியாவில் பொது கட்டடங்களில் தங்கியுள்ள இராணுவத்தை விலக்க ஜனாதிபதி இணக்கம்

வவுனியா மாவட்டத்தில் பொது கட்டடங்களில் தங்கியுள்ள இராணுவத்தை படிப்படியாக விலக்க ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். முதற்கட்ட மாகாண குடியிருப்பு கலாசார மண்டபம், பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிப்பாடசாலை என்பவற்றிலுள்ள இராணுவத்தை விலக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார புனர்வாழ்வு அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் மாகாண அமைச்சர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து கலந்துரையாடினோம்.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த சந்திப்பு ஒன்றரை மணிநேரம் வரை இடம்பெற்றது. வடக்கு மாகாணத்திலுள்ள அன்றாட, உடனடிய பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது இராணுவம் தொடர்ந்தும் பொது இடங்களில் நிலைகொண்டுள்ளமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள பொது இடங்கள் பற்றி ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். படிப்படியாக இராணுவத்தை பொது இடங்களிலிருந்து அகற்றுவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். முதற்கட்டமாக பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிப்பாடசாலை, குடியிருப்பு கலாசார மண்டபம் என்பவற்றிலிருந்து உடனடியாக இராணுவத்தை விலக்க சம்மதம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் ஒரேயொரு கூட்டுறவு பாடசாலை பூந்தோட்டத்தில் அமைந்துள்ளது. 2009 இற்கு பின்னர் இராணுவத்தால் கையேற்கப்பட்ட இந்த கட்டடமானது முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு நிலையமாக இயங்கி வருகின்றது.


அதேபோன்று குடியிருப்பு கலாசார மண்டபம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இராணுவ முகாமாக இயங்கி வருகின்றது. மக்கள் செறிந்து வாழுகின்ற நகரப்பகுதியில் கோவில், சிறுவர் பூங்கா, பாடசாலைக்கு மத்தியில் இந்த முகாம் இயங்கி வருகிறது. இவற்றிலிருந்து இராணுவத்தை விலக்கி இயல்பு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்வும் கேட்டுக்கொண்டதாக அவர் தெரிவித்தார். (2-250)

# ஹர்த்தாலால் இயல்புநிலை முடக்கம்

மன்னார்







முல்லைத்தீவு








கிளிநொச்சி







வவுனியா







சிறைச்சாலைகளில் மீண்டும் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி பொது மன்னிப்பின் அடிப்படையில் உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற ஹர்த்தாலின்போது சகல வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் என்பன மூடப்பட்டு மக்கள் ஏகோபித்த ஆதரவை வெளிக்காட்டியிருந்தனர். அத்துடன் தனியார் இ.போ.ச பேரூந்து சேவைகள் இடம்பெறவில்லை. நகரங்கள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் இயல்பு நிலை முற்றாக முடக்கப்பட்டது. வீதிகளில் பொலிஸாரின் நடமாட்டமும் ஆங்காங்கே காணப்பட்டது.

(படங்கள்:-குருமன்காடு, மல்லாவி, முள்ளியவளை செய்தியாளர்கள்)

## ஐ.நா.செயற்குழுவினர் முல்லைக்கு நேற்று விஜயம்

காணாமற் போனோர் தொடர்பாக ஆராயும் ஐக்கிய நாடுகள் சபை செயற்குழுவின் பிரதிநிதிகள், காணாமற் போனோரின் உறவுகளைச் சந்தித்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நேற்று முல்லைத்தீவிற்கு விஜயம் செய்தனர்.

இதன்போது அவர்கள் காணாமற் போனவர்களின் உறவினர்களைச் சந்தித்து விசாரணைகள் மேற்கொண்டதுடன் அவர்களிடம் விண்ணப்பப் படிவம் ஒன்றினையும் வழங்கி அதனைப் பூரணப்படுத்தி தமக்கு அனுப்பிவைக்குமாறு கூறினர்.

இவ்விஜயத்திற்கான ஏற்பாடுகள் மிகவும் இரகசியமான முறையில் மேற்கொள்ளப்பட்டபோதும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தம்மீது இருந்ததாக கலந்து கொண்ட உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

நேற்று நடைபெற்ற விசாரணையானது காலை முதல் நண்பகல் வரை முல்லைத்தீவு நகரில் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-302)



கிளிநொச்சியில் நேற்று பெய்த மழை காரணமாக குடிமனையினுள் வெள்ளநீர் புகுந்து வெள்ளக்காடாக காட்சி அளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-மல்லாவி செய்தியாளர்)

## மூன்று அங்குல உயரத்திற்கு வான்பாயும் கனகாம்பிகைக்குளம்

(மல்லாவி)

இரணைமடுக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களில் முதலாவது குளமான கனகாம்பிகைக்குளம் மூன்று அங்குல உயரத்திற்கு வான் பாயத் தொடங்கியுள்ளதாக இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர்ப்பாசனப் பொறியியலாளர் குணரட்ணம் செந்தூரன் அறிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

34 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடுக்குளத்திற்கு 21 அடி 5 அங்குலமாக நீர் கிடைக்கப் பெற்றுள்ளது.

24 அடி கொள்ளளவு கொண்ட அக்கராயன் குளத்திற்கு 16 அடி 7 அங்குலமாகவும் 24 அடி கொள்ளளவு கொண்ட கல்மடுக் குளத்திற்கு 17 அடி 5 அங்குலமாகவும் 10 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய கனகாம் பிகைக் குளத்திற்கு 10 அடி 9 அங்குலமாகவும் நீர் கிடைக்கப்பெற்று 3 அங்குல உயரத்திற்கு வான்பாயத் தொடங்கியுள்ளது.

10அடிகொள்ளளவுடையகரியாலை நாகபடுவான் குளத்திற்கு 9 அடி 6 அங்குலமாகவும் 12 அடி கொள்ளளவுடைய பிரமந்தனாறு குளத்திற்கு 5 அடி 7 அங்குலமாகவும், 19 அடி கொள்ளளவுடைய புதுமுறிப்பு குளத்திற்கு 17 அடியாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய வன்னேரி குளத்திற்கு 8 அடி 5 அங்குலமாகவும் 8 அடி 9 அங்குலம் கொள்ளளவுடைய குடமுறுட்டி குளத்திற்கு 8 அடி ஒரு அங்குலமாகவும் நீர் வரத்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை இரணைமடுக்குள நீரேந்து பிரதேசத்தில் 74.2 மில்லி மீற்றராகவும் கரியானை நாகபடுவான் குள நீரேந்து பிரதேசத்தில் 7.5 மில்லிமீற்றராகவும் அக்கராயன் குளம் நீரேந்து பிரதேசத்தில் 3.5 மில்லி மீற்றராகவும் மழை வீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)

# 6500 படைவீரர்களின் குடும்பங்களின் பொறுப்பினை ராஜித ஏற்க வேண்டும்

## அவன்கார்ட் நிறுவனத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

6500 படைவீரர் குடும் பங்களின் பொறுப் புக்களை சுகாதார அமைச்சர் ராஜித சேனார ட்ன ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவன் கார்ட் நிறுவனத்தின் தலை வர் மேஜர் நிசாங்க சேனா திபதி தெரிவித்துள்ளார்.

அவன்கார்ட் நிறுவனத்தில் கடமையா ற்றி வரும் 6500 படை வீரர் குடும்ப ங்களின் குடும்பத் தலைவர் களது தொழில் வாய்ப்பு குறி த்த பொறுப்பினை அமைச்சர் ராஜித ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நிறுவனத்தில் ஓய்வு பெற்ற 6500 படைவீர ர்கள் குடும்ப ங்களை இருளில் ஆழ்த்தும் தீர்மானங்களை எடுத்தால் அதன் பூரண பொறுப்புக்க ளையும் அமைச்சரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவன்கார்ட் நிறுவ னத்தின் நடவடிக் கைகள் கடற்படையினரிடம் ஒப்ப டைக்க ப்பட்டுள்ளதாக அமைச் சர் ராஜித சேனாரட்ன வெளி யிட்ட கருத்து குறித்து சிங்கள ஊடக மொன்று நிசாங்க டம் தொடர்பு கொண்டு எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரி வித்தார். (இ-10)


## விற்பனைக்கு

வாங்கி இரண்டு மாதம் பாவித்த மின்சார மோட்டார் வாகனம் Charge பண்ணிய பின்பு 80-85 km வரை தூரம் ஓடக்கூடிய செம்மஞ்சள் நிறமுடையது. விற்பனை விலை 1 இலட்சத்து 50 ஆயிரம். கிட்டிய விலை எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடர்புகளுக்கு:-**
**075 503 2515**

(2285)


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### கேள்வி அறிவித்தல் -2016

எமது சபையால் 13/11/2015 திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரத்தினை பின்வருமாறு திருத்தி வாசிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கேள்வி அறிவித்தல் அட்டவணையில் ஆகக் குறைந்த கேள்வித் தொகை, மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம், மாத வாடகை என்பன வரிகள் நீங்கலாக என்பதனை சேர்த்து வாசிக்கவும்.

**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,**
**கரவெட்டி.**

(சி-2705)

## அரசாங்க அறிவித்தல்

### மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்
### வழங்குநரை பதிவுசெய்தல்

யாழ். மாவட்ட செயலகம், யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2016 ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவுசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவுசெய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாவட்டசெயலக் களஞ்சிய நலன்புரிக்கிளை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2015.11.16 தொடக்கம் 2015.12.07 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும். www.jaffna.dist.gov.lk என்ற இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 08.12..2015 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநரை பதிவுசெய்தல் - 2016" எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டசெயலகத்தின் களஞ்சிய நலன்புரிக்கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வழங்கல்கள், சேவைகள் விபரம்.**

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
02. மர, உருக்கு, பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் தளபாடங்கள் வழங்கலும், திருத்தலும்.
03. இலத்திரனியல், மின்சாரப்பொருட்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்தலும், பராமரித்தலும்
04. சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருட்கள்
05. கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், தீந்தை (பெயின்ற்), ஹாட்வெயர் பொருட்கள் வழங்கல்
06. மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்புசெய்தல், ரயர், ரியூப், பற்றிகள், உதிரிப்பாகங்கள் வழங்கல்
07. குடி நீர், பால்மா, மென்பானம், உணவு வகைகள்
08. திரைச்சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புக்கள், நில விரிப்புக்கள்
09. தோல் வகை உற்பத்திப் பொருட்களும், விளையாட்டுப் பொருட்களும்
10. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அடையாள அட்டைகள் செய்தல்
11. நீர் விநியோக பொருத்துக்கான பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் வழங்கல்
12. மின் இணைப்பு வேலைகள் குழாய் பொருத்துநர்

**நா.வேதநாயகன்,**
**மாவட்ட செயலர்,**
**யாழ் மாவட்டம்.**

(சி-2713)

## அரசாங்க அறிவித்தல்

### கேள்வி அறிவித்தல் -2016

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. செயலக சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. புகைப்படப்பிரதி இயந்திர பராமரிப்பு
3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
4. வாகன சுத்திகரிப்புச் சேவை
5. செயலக பாதுகாப்புச் சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத் தினையும் செயலக களஞ்சியநலன்புரிக்கிளையில் 2015.11.16 ஆம் திகதியிலிருந்து அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங் களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன்,**"தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம"**எனும் முக வரியிட்ட, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விபரத்தினை குறிப்பிட்டு 2015.11.30 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**நா.வேதநாயகன்,**
**மாவட்ட செயலர்,**
**யாழ். மாவட்டம்.**

(சி-2712)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 49 செவ் 1ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்O/L சொந்த தொழில்<br>தொ.இ: B/1504 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 52.25, செவ். 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் Bsc S.L.A.S MBA அரசதொழில<br>தொ.இ: G/3052 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4ம்<br>கி.பா: 26.25 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:BA அரசதொழில்<br>தொ.இ: B/1513 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 42<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B.Sc S.L.A.S அரசதொழில்<br>தொ.இ: G/3059 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 15.25 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:IT Bsc UK குடியுரிமை<br>தொ.இ: B/1524 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி1<br>கி.பா: 30<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:Bsc ஆசிரியர்<br>தொ.இ: G/3062 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 3<br>கி.பா: 43<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:B-A அரச தொழில்<br>தொ.இ: B/1526 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 21<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/3067 |

## கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:-021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

# சூழலுக்கிசைவான பசுமைத் தொழில் நுட்பங்கள்–69

## மாதர்சங்கங்களை தொழிற்றுறையில் வலுவூட்டுதல்: நல்லதொரு ஆரம்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எமது பிரதேசத்து வளங்களுள் மனிதவளத்தை மேலும் நாம் வினைத்திறனாக பயன்படுத்தும் காலத்திற்குள் பரிணமிக்க வேண்டியிருக்கின்றது. குறிப்பாக தொழிற்றுறையின் வளர்ச்சி இங்கே முழுமையாக தேவைப்படுகின்றது.

அதிலும் எமது மக்களை உள்வாங்கிய தொழிற்றுறையின் வளர்ச்சியினையே நாம் இதில் முக்கியத்துவப்படுத்த வேண்டும். அரசதொழில் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாந்திருக்கும் பல உறவுகளை நாம் அன்றாடம் காணலாம்.

பலதரப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் இந்த தொழில் வாய்ப்பில் தங்கியிருக்கின்றது. தொழில தருநர்கள் அரிதாக இருக்கும் போது தனியார் தொழில் வாய்ப்புக்கள் பெரிதாக இருக்க வாய்ப்பில்லை.

அதனால் அனைவரும் அரச தொழிலாக தேடியலைந்து கொண்டிருப்பதனாலும், அது அவர்களுக்கான ஒரு சமூக பெறுமதியையும் கௌரவத்தையும் வழங்கும் என்னும் காரணத்தாலும் அரச தொழில் தேடலிலிருந்து தனியார் தொழிற்றுறைக்கு மக்கள் பெரிதாக உள்வாங்கப்படுவதில்லை.


மாறாக தற்போதைய சூழலில் தனியார் தொழிற்றுறைக்குள்ளும் சிறிது சிறிதாக மக்கள் குறிப்பாக இளையவர்கள் உள்ளீர்க்கப்பட முனைந்திருப்பது தற்போதைக்கு நல்லதொரு செய்தி. இதனை இன்னும் நாம் பலமானதாக தனியார் தொழிற்றுறையின் வளர்ச்சியை தொழில்நுட்ப வளர்ச்சியுடன் சேர்த்து பார்க்க வேண்டும். தனியார் தொழிற்றுறையின் வளர்ச்சிக்கான அத்திபாரம் பலமானதாக இடப்பட வேண்டிய காலகட்டம் இது.

வடபுலத்தில் நடைபெறும் போரின் பின்னரான பல நிகழ்வுகளில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் குறிப்பாக மாதர் சங்கங்களை வலுவூட்டுவதான செயற்பாடுகள் முனைப்பு பெறுவதனை காணலாம்.

போரில் பாதிக்கப்பட்ட பெண்கள் குறிப்பாக கணவனை இழந்தவர்கள் அதிலும் அவர்களே தலைமை தாங்கும் குடும்பங்கள், கல்வியை இழந்தவர்கள், சிறுவய தில் குடும்பச் சுமையை தாங்க வேண்டிய கட்டாயத்திலுள்ளவர்கள், பெற்றோரை இழந்த பெண்பிள்ளைகள், பாலியல் துன்புறுத்தல்களுக்குள் உள்வாங்கப்படுபவர்கள், அங்கவீனர்கள், இன்னும் மாற்று திறனாளிகள் என பலரை உள்ளடக்கியதாக இருப்பதனை காணலாம்.

இவற்றுக்கெல்லாம் ஒருவகையில் தீர்வினை காண்பதற்காக கிராமங்கள் தோறும் மாதர் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு பல மாதர் சங்கங்கள் சிறப்பாக இயங்குவதனை காணமுடிகின்றது.

மாதர் சங்கங்கள் பெண்களாலேயே நிர்வகிக்கப்படுகின்ற ஓர் எளிமையாக கட்டமைப்பாக இருக்கின்ற போதிலும் அதனை வலுவூட்டும் செயற்பாடுகள் இன்னும் முனைப்பாக நடைபெறுதல் அவசியமாகும்.




இதற்காக பலதரப்பட்ட வலுவூட்டும் நிறுவனங்கள் செயற்பட்டு வருவதும் நல்ல செய்தியே. குறிப்பாக பெண்களை தொழில் தருநர்களாக மாற்றும் செயன்முறை வரவேற்கத்தக்கது.

இது போன்றதொரு செயற்பாடாக மாங்குளம் வடக்கு மாதர் கிராமிய அபிவிருத்தி ஒன்றியத்தினால் மாங்குளத்தில் கண்டிவீதியில் "வன்னியின் சுவை உணவகம்" (Taste of Vanni Restaurant) என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருவதை நேரில் சென்று பார்த்த போது அறிந்து கொள்ளக்கூடியதாக யிருந்தது.

கிட்டத்தட்ட 144 உறுப்பினர்களைக் கொண்ட இந்த ஒன்றியத்தில் 21 பெண்கள் தமது முதலை இட்டு அங்கே சிறந்த உணவுகளைத் தயாரித்து சுடச்சுட வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்த அமைப்புக்கு USAID இனது உதவி கிடைக்கப் பெற்று கட்டட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது ஒரு முன்மாதிரியான திட்டமாக கருதலாம். பெண்கள் தமது கைகளால் சுத்தமானதாக தயாரித்து கொடுக்கும் உணவு வகைகள் சுவையானதாகவும் அனைவரும் விரும்பியுண்ணும் உணவுகளாகவும் உள்ளதனை நேரில் சுவைத்தும் பார்த்தும் அறிந்து கொண்டோம். இவ் வழித்தடத்தில் பயணிப்பவர்கள் இவ்வாறான சுவையகங்களுக்கு வருகை தந்து சுவையான உணவை பெற்றுக்கொள்வதோடு இவர்களின் இந்த முயற்சிக்கும் ஆக்கபூர்வமாக நாமும் பங்களிக்கலாம். இந்த ஊக்குவிப்பினை எம்மினிய உறவுகளிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இவ்வாறான சுவை உணவகங்கள் வடபகுதியெங்கும் உருவாக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தினால் தொடர்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாண பெண்கள் சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் அதனூடாக பயன்பெற்று முன்னேற்றங்கண்ட பெண்களைப் பற்றியும் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இதில் கலந்து பயன் பெற்ற பெண்தொழில் முயற்சியாளர்கள் சிலர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு அங்குள்ள பெண்தொழில் முயற்சியாளர்களுடனும் தொழில் வல்லுநர்களுடனும் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தனர்.

அவ்வாறே இந்திய தேசத்திலிருந்து சில பெண்தொழில் முயற்சியாளர்களும் பயிற்சியாளர்களும் யாழ்ப்பாணத்திற்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுள் தெரிவு செய்யப்பட்ட 20 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் சுயதொழில் முயற்சி என்ற வகையில் செயற்பட்ட பெண்கள் சிலர் நிறுவனமயப்படுதப்பட்டிருந்த நிலைக்கு தம்மை தயார் செய்துள்ளனர்.

இதனோர் அங்கமாக 15-16 ஒக்டோபர் 2015 இல் இவர்களது உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தவும் அவர்களிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துவதற்குமென இரு நாட்கண்காட்சி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பலரும் தமது பொருட்களை விற்பனை செய்ததுடன் சிறந்த உற்பத்தி பொருட்களுக்கான விருதையும் பெற்றிருந்தனர். இங்கே இரு நாடுகளுக்குமிடையிலான தொடர்பை இந்நிகழ்ச்சித் திட்டம் உருவாக்கியிருப்பதும் இதனை மேலும் விருத்தியடையவும் வழி செய்திருக்கின்றனர். இம்மாதிரியான திட்டங்கள் பெண்களின் தொழில் முயற்சியை மேலும் வலுவூட்டுவதாக அமைந்திருக்கின்றது.

மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையான செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளித்தல் சிறந்தது. விசுவமடுவிலுள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளும் இங்கே முன்னுதாரணத்திற்குரியது.

போரினால் பாதிக்கப்பட்ட இரு பிள்ளைகளின் தாயான பெண் ஒருவர் தனது கணவனை இழந்த நிலையில் அங்குள்ள மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகி கிடைத்த ஒரு பகுதி நிதியை பெண்கள் அனைவருக்கும் சிறு கடனாக (75.000 இலிருந்து 100.000 வரை) கொடுத்து அவர்களின் தொழில் முயற்சிக்கு ஊக்கம் கொடுத்ததுடன் 100 சதவீதம் அக் கடன்கள் மீளளிக்கப்பட்டு பின் னர் அதிகரித்த கடனை வழங்கி யிருக்கின்றார்.

இத்தகைய பெண்களின் தலைமைத்துவத்தை மெச்சவே வேண்டும். இதற்கு பலரும் உறுதுணையாயிருக்கின்றார்கள். இந்த மாற்றத்தையே நாம் எதிர் பார்த்திருக்கின்றோம். குடும்பங்களில், சமூகத்தில் மகளிருக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்க வேண்டும்.

ஆனாலும் ஒருசில பெண்கள் மாத்திரம் தம்மை உயர்த்திச் செல்வதையும் மற்றையவருக்கான வாய்ப்புக்களை மழுங்கடிப்பதையும் காணலாம். இதனைத் தவிர்த்து அனைவருக்கும் இந்த வாய்ப்பு கிடைப்பதையும் உறுதி செய்து கொள்ளவேண்டும். வாய்ப்புக்கள் கிடைக்குமிடத்து அனைவரினதும் ஆளுமையும் ஆற்றலும் வெளித் தெரியும். எமது பிரதேசத்தில் இதற்கான வாய்ப்புக்களை நாம் இன்னும் எதிர்பார்க்கலாம்.

பெண்களுக்கான கல்வியும், தொழிற் றுறையும் மேன்மையடையும் போது அங்கே குடும்பப் பிரச்சினைகள் குறைந்து, பெண்களுக்கான பாதுகாப்பும் உறுதி செய்யப்படும்.

இதனை எமது சமூகம் நிறையவே எதிர்பார்த்திருக்கின்றது.

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 66







மக்கள் நலன் பேணும் அமைப்பின் 3 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் உதவித்திட்ட நிகழ்வும், பிரபல சட்டத்தரணி சி.ஞானலோஜினி கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது நிகழ்வின் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட கிருபாலேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் மாணவி ஒருவருக்கு உதவித் தொகையினை வழங்குவதையும், பிரபல சட்டத்தரணியும் சமூக சேவையாளருமான சி.ஞானலோஜினிக்கு பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கௌரவப்பட்டம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# 2755 அடி உயரக்கயிற்றில் ஹை ஹீல்ஸ்டன் நடந்து அசத்திய பெண்



அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த திகில் சாகச விரும்பிதான் ஃசெயித் டிக்கி (வயது26) நிறைய சாகசங்களை செய்து போரடித்ததால் அண்மையில் பிரேசில் உயர் பெண்கள் விழாவில் கலந்து கொண்டார். 2755 அடி உயரத்தில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள கயிற்றால் இணைக்கப்பட்டிருக்கும் தடத்தில் ஹை ஹீல்ஸ் அணிந்த காலுடன் நடந்து அனைவரையும் பிரமிக்க வைத்துள்ளார்.

## கையடக்கத் தொலைபேசிகளை நிறுத்திவிட்டு பிள்ளைகளுடன் இணைந்து உணவருந்துங்கள்

### பலமான குடும்ப உறவுக்கு வழிவகுக்கும் என்கிறார் பாப்பரசர்



**பெற்றோர்கள் பலமான குடும்பமொன்றைக் கட்டியெழுப்ப விரும்பினால், தினசரி உணவு நேரங்களில் கையடக்கத் தொலைபேசிகள், கணனிகள் மற்றும் தொலைக்காட்சிகளை நிறுத்திவிட்டு தமது பிள்ளைகளுடன் இணைந்து உணவு அருந்த வேண்டும் என பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.**

வத்திக்கானிலுள்ள சென்.பீற்றர்ஸ் சதுக்கத்தில் ஆற்றிய வாராந்த உரையின் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.


மேற்படி இலத்திரனியல் உபகரணங்களுக்கு அடிமைப்பட்டு பிள்ளைகளை அலட்சியம் செய்வது, அந்தப் பிள்ளைகள் ஓய்வுபெற்ற வயோதிபர்கள் போன்று தனிமைப்படுத்தப்பட வழிவகை செய்வதாக உள்ளது என அவர் கூறியுள்ளார்.

குடும்பத்தினர் சிறுவர்களுடன் இணைந்து உணவருந்துவது புதிய தலைமுறையினரை ஊக்குவித்து அவர்களுடனான உறவை வலுப்படுத்தும் என அவர் தெரிவித்தார்.

இலத்திரனியல் உபகரணங்களுக்கு அடிமைப்பட்டு ஒன்றாக உணவருந்துவதை தவிர்ப்பது, குடும்ப உறுப்பினர்களுக்கிடையிலான நெருக்கத்தை இல்லாமல் செய்யும் என அவர் வலியுறுத்தினார். (3-7)

## புதிய அரசுடன் ஒத்துழைப்பதாக மியன்மார் இராணுவம் அறிவிப்பு

### அமெரிக்க ஜனாதிபதி தொலைபேசியில் வாழ்த்து



மியன்மாரின் புதிய அரசுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதாக அந்நாட்டு இராணுவ தளபதி மின் அங் ஹைங் உறுதி அளித்துள்ளார். "தேர்தலுக்கு பின்னரான காலத்தில் இராணுவம் புதிய அரசுடன் சிறந்த முறையில் ஒத்துழைப்புடன் செயற்படும்" என்று அவர் அறிவித்துள்ளார்.

மியன்மாரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த தேர்தலில் ஆங் சாங் சூகியின் ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சி பெரு வெற்றியை நோக்கி முன்னேறி வருவதோடு, இதுவரை அறிவிக்கப்பட்ட தேர்தல் முடிவுகளில் சுமார் 90 வீத இடங்களை பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் பாராளுமன்றத்தில் கால்பங்கான ஆசனங்கள் இரா ணுவத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்நாட்டு அரசியலில் இராணுவம் தீர்க்கமான பங்கு வகித்து வருகிறது.

கடந்த ஞாயிறு தேர்தல் மியன்மாரில் 25 ஆண்டுகளில் இடம்பெற்ற வெளிப்படையான தேர்தலாக அமைந்திருந்தது.

ஜனாதிபதி தெயின் சைன் மற்றும் மின் அங் ஹைங் ஆகியோர் அதிக வாக்குகளை பெற்ற சூகிக்கு வாழ்த்து தெரிவித்திருந்தபோதும் இதுவரை உத்தியோகபூர்வமாக தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. இறுதி முடிவு அறிவிக்கப்பட்ட பின்னர் சூகியுடன் தேசிய நல்லிணக்கம் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவும் இவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதுவரை வெளியான முடிவுகளின் படி இராணுவ ஆதரவுடைய ஆளும் கட்சி வெறும் 5 வீத வாக்குகளையே வென்றுள்ளது.

மியன்மார் ஜனாதிபதி தெயின் சைன்னை தொலைபேசியில் அழைத்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, நாட்டில் நீதி மற்றும் நியாயம் கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் ஒன்றை நடத்தியதற்கு வாழ்த்து தெரிவித்தார். "இரண்டாவதாக தேர்தலில் வெற்றிகண்ட ஜனநாயகத்திற்கான தேசிய லீக்கிற்கும் எனது வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று ஒபாமா குறிப்பிட்டதாக மியன்மார் அரச பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மக்களின் தீர்ப்பு மற்றும் தேர்வுக்கு மதிப்பளிப்போம் என்று குறிப்பிட்டிருக்கும் ஜனாதிபதி தெயின் சைன், திட்டமிட்டபடி அதிகாரம் கையளிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (3-7)

## பூட்டான் பிரதமர் இந்தியா வருகை

கோவா மாநிலத்தில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக பூட்டான் பிரதமர் ஷேரிங் டாப்கே இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார்.

"இந்தியாவின் சிந்தனைகள்" என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு கோவாவில் நேற்று ஆரம்பமாகியது. இந்த மாநாட்டில் பூட்டான் பிரதமர் ஷேரிங் டாப் கேவை சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளுமாறு இந்திய அறக்கட்டளை விடுத்துள்ள அழைப்பை ஏற்று, கோவாவுக்கு அவர் வருகை தருகிறார். மேலும் நாளை (நவம்பர் 15) "நாகரீகத்திடம் இருந்து கற்றல்" என்ற தலைப்பில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் அவர் உரையாற்றவுள்ளார். (3-7)




## விமான போக்குவரத்துகளை கண்காணிக்க செயற்கைக் கோள்களின் உதவி

### ஐ.நா.சபையில் நாடுகள் இணக்கம்

(வோஷிங்டன்)

நாடுகளுக்கிடையில் இடம்பெறும் விமானப்போக்குவரத்தை செயற்கைக்கோள் மூலம் கண்காணிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் சபையில் நேற்று முன்தினம் விமான விபத்துக்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அண்மைக்காலமாக விமான விபத்துக்கள் அடிக்கடி இடம் பெறுவதும் குறிப்பாக மலேசிய விமான விபத்துக்களுக்கான காரணங்கள் குறித்து இதுவரை கண்டறியப்படாத நிலையில் இவ்விடயம் குறித்து ஐ.நா.சபையில் விவாதிக்கப்பட்டுள்ளது.

நாடுகளுக்கிடையில் இடம்பெறும் விமானப் போக்குவரத்தை செயற்கைக்கோள் மூலம் கண்காணிப்பதற்கு அனைத்து நாடுகளும் இணக்கம் கண்டுள்ளன. இதன் மூலம் காணாமற் போகும் விமானங்களை கண்காணித்து காரணங்களை அறியக்கூடியதாக விருக்கும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (3)

# தென்சீனக் கடலில் வட்டமிடும் அமெரிக்கப் போர் விமானங்கள்

## பிராந்தியத்தில் பதற்றம் அதிகரிப்பு

**(பீஜிங்)**

**சர்ச்சைக்குரிய தென்சீனக் கடற்பகுதியில் இரண்டு அமெரிக்கப்போர் விமானங்கள் நேற்று பறந்ததையடுத்து அங்கு ஒரு பதற்றமான சூழல் நிலவி வருகிறது.**

சர்ச்சைக்குரிய தென்சீன கடற்பகுதியில் சிறிய தீவுகளை இணைத்து விமானப் படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கு சீனா நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி கடற்பகுதி தமக்கே சொந்தமானது என்று சீனா தெரிவித்து வரும் நிலை அந்த கடற்பகுதி தமக்குரியது என்று தென்கொரியா கூறி வருகிறது. இந்நிலையில் இந்தக் கடற்பகுதி சீனாவுக்கு உரியதல்ல என்றுஅமெரிக்காதெரிவித்திருந்தது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இரண்டு யுத்தக்கப்பல்களை அமெரிக்கா அப்பகுதிக்கு அனுப்பியிருந்தது.இது குறித்து சீனா கடுப்புற்ற நிலையில் செயற்படுவதற்கு முதல் இரண்டு தடவைகள் அமெரிக்கா சிந்திக்க வேண்டுமென சீனா எச்சரித்திருந்தது.



இந்நிலையில் நேற் றையதினம் இரண்டு யுத்த விமானங்களைஅமெரிக்கா அப்பகுதிக்கு அனுப்பியுள்ளது. அவை மேற்படி சர்ச் சைக்குரிய தீவுக்கு மேலாகப் பறந்த தினால் சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் முறுகல் நிலை உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. (3)

# ஐ.எஸ்ஸிடமிருந்து நகரைக் கைப்பற்ற குர்து போராளிகள் கடும் சண்டை

ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து சிஞ்சார் நகரத்தை மீட்பதற்கு குர்து படைகள் தீவிரமாக சண்டையிட்டு வருகின் றன.

ஈராக்கில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்று சிஞ்சார். இந்த நகரம், மொசூல், ராக்கா நகரங்களை இணைக்கிற முக்கிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த நகரத் துக்கு ஈராக் அரசும், குர்து அதிகாரிகளும் உரிமை கொண்டாடுகின்றனர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆயிரக் கணக்கான யாஜிதி மக்களை கொன்று குவித்தும், அடிமைப்படுத்தியும் இந்த சிஞ்சார் நகரத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப் பற்றினர். அதைத் தொடர்ந்து டிசம்பர் மாதம், அந்த நகரின் வடக்கு பகுதியில் இருந்து ஐ.எஸ். தீவிரவாதிகளை குர்து இன படையினர் விரட்டியடித்தனர். ஆனால் ஐ.எஸ். தீவிரவாதிகள் தெற்கு பகுதியை தொடர்ந்து தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

இந்த நிலையில், சிஞ்சார் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிற பகுதிகளில் அமெரிக்க கூட்டுப்படைகள் நேற்று முன்தினம்வான்தாக்குதலை நடத்தின.

இந்த தாக்குதலை தொடர்ந்து சிஞ்சார் மலையில் இருந்து, 7 ஆயிரத்து, 500க்கும் மேற்பட்ட குர்து இன சிறப்பு படையினர், பேஸ்மெர்கா படையினர், யாஜிதி படையினர் இறங்கி ராணுவ வாகனங்களில் நகரை நோக்கி அணிவகுக்கத் தொடங்கினர்.


சிஞ்சார் நகரை முழுமையாக மீட்டு விட வேண்டும் என்ற உத்வேகத்துடன் அவர்கள் நேற்று முன்தினம் அந்த நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதலை தொடங்கினர். இரு தரப்புக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது.

ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு செல்லக் கூடிய விநியோக பாதைகளை சுற்றிவளைப்பதில் கூட்டுப்படையினர் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்தச் சண்டையில் சிஞ்சார் நகருக்கு அருகேயுள்ள பல்வேறு கிராமங்களை குர்து கூட்டு படையினர் தங்கள் வசம் கொண்டு வந்து விட்டதாக தகவல்கள் கூறுகின்றன.


அதே நேரத்தில் சிஞ்சார் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து முழுமையாக மீட்பது என்பது எளிதான நடவடிக்கையாக இருக்காது என்று குர்து கூட்டுப்படையினர் தெரிவித்தனர். (3-7)

# ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர அங்கத்துவம் பெற பிரித்தானியா ஆதரவு




இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேற்று முன்தினம் பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது பிரதமர் மோடி சிறப்பான வரவேற்புடன் அழைத்துச் செல்லப்படுவதை படத்தில் காணலாம்.இதேவேளை பிரதமர் மோடிக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றும் லண்டனில் இடம் பெற்றுள்ளது.

# ஐ.எஸ்.தற்கொலை தாக்குதல்; லெபனானில் 41பேர் உயிரிழப்பு



லெபனான் நாட்டின் தலைநகரான பெய்ருட்டில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இரட்டை தற்கொலைப்படை தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது.லெபனானில் இடம்பெற்றுவரும் போரில் இதுவரை சுமார் 70 ஆயிரம் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா. மனித உரிமை கமிஷன் தெரிவித்துள்ளது. உயிருக்கு பயந்த லட்சக்கணக்கான மக்கள் லெபனான், ஈராக் உள்ளிட்ட அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். இந்நிலையில், லெபனான் தலைநகரான பெய்ருட்டை ஒட்டியுள்ள செஞ்சிலுவை சங்கத்தின் அகதிகள் முகாம் உள்ள பவ்ரஜ்-அல்-பராஜ்னே என்ற இடத்தில் நேற்று முன்தினம் மாலை உடலில் வெடிகுண்டுகளை கட்டிவந்த ஒரு தீவிரவாதி வெடித்து சிதறியதில் 27 பேர் பலியாகினர்.இந்த தாக்குதல் நடைபெற்ற அடுத்த 5 நிமிடத்தில் அங்கிருந்து சுமார் 150 மீட்டர் தொலைவில் மற்றொரு தற்கொலை தீவிரவாதி தன் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்ததில் 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 40 பேர் காயமடைந்துள்ளனர்.இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது.

# பிரதமர் மோடி இங்கிலாந்து பயணம்



(லண்டன்)

பிரதமர் நரேந்திர மோடி, இங்கிலாந்து, துருக்கி ஆகிய இரு நாடுகளில் 5 நாள் அரசுமுறை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பயணத்தின் முதல்கட்டமாக அவர் நேற்று முன்தினம் இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு புறப்பட்டு சென்றார். லண்டன சென்றடைந்த அவரை ஹீத்ரோ விமான நிலையத்தில் இங்கிலாந்து அமைச்சர்கள் ஹியூகோ சுவைர், பிரீத்தி பட்டேல், இங்கிலாந்துக்கான இந்திய தூதர் ரஞ்சன் மத்தாய், இந்தியாவுக்கான இங்கிலாந்து தூதர் ஜேம்ஸ் பேவன் மற்றும்உயர்அதிகாரிகள்வரவேற்றனர.

பின்னர் பிரதமர் மோடியும், கமரூனும் நிருபர்களுக்கு கூட்டாக பேட்டி அளித்தனர். தொடர்ந்து அவர் பாராளுமன்ற சதுக்கத்தில் அமைந்துள்ள தேசபிதா மகாத்மா காந்தி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பாராளுமன்றத்தில் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

இங்கிலாந்து பாராளுமன்றில் பேசுவது பெருமையாக உள்ளது.

இருநாட்டு உறவுகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இரு நாடுகளும் வலுவான ஜன நாயகம் பொருளாதாரத்தை கொண டுள்ளன.

இந்தியாவில் அதிகளவில் முதலீடு செய்த நாடுகளில் இங்கிலாந்து முக்கிய இடம் வகிக்கிறது.

இந்திய மாணவர்கள் கல்வி கற்கும் மையமாக இங்கிலாந்து உள்ளது.

இங்கிலாந்து இந்தியா ஆகிய இரு நாடுகளின் வரலாற்றிலும் காந்தியின் தாக்கம் உள்ளது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக அனைவரும் இணைந்து செயல்படுவது முக்கியம்.

இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று உதவிகள் செய்து முன்னேற முடியும்.

இந்தியாவும் இங்கிலாந்தும் மனித குலத்தை மேம்படுத்தும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-7)

# தமிழ் சினிமா வரலாறு

54

## கிருஷ்ணன்-மதுரம் காதல் திருமணம்

...அப்போது காரில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறான்.

மேனகா நர்ஸ் வேடத்தில் அவனுக்கு பணிவிடை செய்கிறாள்.

இறுதியில் உண்மை வெளியாகிறது.

வராக்சாமியும் மேனகாவும் ஒன்று சேருகிறார்கள்.

### ராஜா சாண்டோ

பம்பாய் ரஞ்சித் ஸ்டுடியோவில் உருவான மேனகாவை ராஜா சாண்டோ டைரக்ட் செய்தார்.

கதாநாயகனாக டி.கே.சண்முகமும் கதாநாயகியாக கே.டி.ருக்மணியும் சாமாவாக என்.எஸ்.கிருஷ்ணனும் நடித்தனர்.

டி.கே.எஸ்.சகோதரர்களில் ஒருவரான டி.கே.முத்துசாமி, பெண் வேடத்தில் (விதவைப் பெண்ணாக) பிரமாதமாக நடித்தார்.

1935 இல் வெளிவந்த மேனகா பெரும் வெற்றி பெற்றது.

தமிழ்த் திரை உலகில் மகத்தான வெற்றி கண்ட முதல் சமூகப் படம் மேனகா.

மேனகாவைத் தொடர்ந்து என்.எஸ்.கிருஷ்ணன் நடித்த படம் சதிலீலாவது.

இது, எஸ்.எஸ்.வாசன் எழுதிய கதை. எம்.ஜி.ஆருக்கு இது முதல் படம்.

### டி.ஏ.மதுரம்

என்.எஸ்.கிருஷ்ணனின் மூன்றாவது படம் வசந்தசேனா.

இதில் அவருடைய ஜோடியாக டி.ஏ.மதுரம் அறிமுகம் ஆனார்.

டி.ஏ.மதுரம் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்தவர். அந்தக் காலத்துக் கதாநாயகிகளை விட மதுரம் அழகாக இருப்பார்.

வசந்தசேனா படம் புனா நகரில் உருவாகியது.

நடிகர்- நடிகைகள் சென்னை சென்டிரலில் இருந்து ரெயிலில் புறப்பட்டபோது புரொடக்ஷன் மேனேஜர் ரெயிலைப் பிடிக்க முடியவில்லை.

அதனால் செலவுக்கு என்ன செய்வது என்று நடிகர்- நடிகையர் தவித்தபோது அவர்களைப் பத்திரமாக புனாவுக்குக் கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பை கலைவாணர் ஏற்றார்.

டி.ஏ.மதுரத்திடம் சென்று நிலைமையை விளக்கி அவரிடம் இருந்த பணத்தைக் கேட்டார்.





மதுரம் தயக்கமின்றி கொடுத்தார்.

புனா போய்ச் சேர்ந்த பிறகும் படத்தயாரிப்புக் குழுவினர் வந்து சேரவில்லை.

என்.எஸ்.கிருஷ்ணன் மீண்டும் மதுரத்தின் உதவியை நாடினார். மதுரம் தன் நகைகளைளக் கழற்றிக் கொடுத்தார்.

### திருமணம்

கலைவாணர்- மதுரம் இதயங்கள் இணைந்தன. வசந்த சேனா படப்பிடிப்பின்போது டைரக்டர் ராஜா சாண்டோ முன்னிலையில் என்.எஸ்.கிருஷ்ணனும் டி.ஏ.மதுரமும் திருமணம் செய்துகொண்ட (தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 322

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...அது உங்களை அன்பிலும் மன நிறைவிலும் எழச் செய்யும்.

பிரபஞ்ச இருப்புத் தன்மையுடன் சங்கமிக்கும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டுவிட்டீர்கள்!

எவ்வாறு எப்பொழுதும் ஒரு ஆழமான தொடர்பிலேயே இருப்பது என்பதைத் தெரிந்துகொண்டு விட்டீர்கள்.

எவ்வாறு எல்லோரையும் எல்லாவற்றையும் ஒரு முழுமையின் பகுதியாகப் பார்ப்பது என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டீர்கள்.

கூறுபோட்டு ஆராய்ந்து கொண்டு துண்டிக்கப்பட்டதாக எண்ணிக்கொண்டிருக்காமல் அதற்குப் பதிலாக எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டீர்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக குருவுடன் எவ்வாறு உறவு கொள்வது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

நன்றியுணர்வே உங்கள் பிரார்த்தனையாகிவிடும் பொழுதுதான் குருவுடனான உண்மையான உறவு ஆரம்பிக்கும்.

அதுவரையில் நீங்கள் கேட்டுக் கொண்டு மட்டுமே இருக்கிறீர்கள். கேட்கும் பொழுது தவறவிட்டு விடுகிறீர்கள்.

இப்பொழுதும் கூட மிகவும் தெளிவாக இருங்கள்...

நான் உங்களுக்கு நன்றியுணர்வுடன்

சாமி எப்பொழுதும் சொல்வேன்... சாமி ஒரு விடுதலை அளிக்கும் குரு! சாமி மக்களிடம் செயற்படும் பொழுது அவர்

இருக்கும்படி கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை.

ருக்கும் சக்தியால் அந்த வெற்றிடத்தை உருவாக்க முடியும், அவ்வளவே.



நான் உங்களுக்குள் ஒரு வெற்றிடத்தை உருவாக்கவே முயற்சி செய்து கொண்டு இருக்கிறேன்.

அங்கு நீங்கள் நான் சொல்வதை உணர்ந்து கொள்ள முடியும்.

அங்கு அது உங்களுக்கு சொந்த அனுபவமாகிவிடும்.

என் வார்த்தைகளுக்குப் பின்னாலி

எப்பொழுது உங்களுக்குச் சுதந்திரம் கொடுக்கப்படுகிறதோ, அப்பொழுது நீங்கள் சிறந்த மனிதராகிறீர்கள். திறப்பதற்குத் தயாராகிறீர்கள்.

நீங்கள் உளவியல் ரீதியான அடிமைத் தனத்தில் இருக்கும் பொழுது ஆராய்ந்து உங்கள் உள்வெளியைக் கண்டுபிடிப்பது கடினமாகிறது.

களுக்கு மாபெரும் சுதந்திரம் அளிப்பேன்.

அப்பொழுதுதான் அவர்களுக்கு ஆராய்வதும் வளர்வதும் சுலபமாகிறது.

ஆயினும் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்துவிட்டு இடையில் குறுக்கிடாமல் கவனித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை.

உளவியல் ரீதியான அடிமைத்தனம் தவிர்க்கப்பட வேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன்.

வெறுமனே அவர்கள் வளர்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குங்கள்.

சந்தேகத்திற்கிட மின்றி தேவையான முன்னெச் சரிக்கைகளை எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதுதான்.

ஆனால், அவர்கள் தொண்டையில் வைத்துத் திணிப்பதற்குப் பதில் அவர்களே உண்மையை அனுபவ பூர்வமாக உணர்ந்துகொள்ள விடுங்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# விடுதலை செய்யப்படுபவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும்

## பிரித்தானிய தமிழர் பேரவை கோரிக்கை

(கொழும்பு) —

**சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்படுபவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துமாறு பிரித்தானிய தமிழர் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக பிரித்தானிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.**

இலங்கையின் சிறைகளில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக் கைதிகள் அனைவரும் காலதாமதமின்றி விடுதலை செய்யப்படுவதுடன் அவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என பிரித்தானிய தமிழர் பேரவையினராகிய நாம் இலங்கை அரசிடமும், சர்வதேச நாடுகள் முன்பும் எமது கோரிக்கையினை முன்வைக்கின்றோம்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் ஓர் வடிவமாக சட்டத்துக்கு முரணான கைதுகளும், காணாமற் போகச் செய்யப்படுதலும் ஆட்சிக்கு வரும் இரு சிங்கள பேரினவாத அரசுகளாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இவ்வாறு சிறையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களை விடுதலை செய்யக் கோரி பிரித்தானிய தமிழர் பேரவையினர் தமது தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

அதே சமயம் தமது விடுதலையைக் கோரி சிறைக்கைதிகள் கடந்த மாதம் உண்ணாவிரத போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர்.

எனினும் அரசினால் வழங்கப்பட்ட உறுதி மொழியினைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டிருந்த நிலையில், அவர்கள் விடுதலை தொடர்பில் இலங்கை அரசினால் எதுவிதமான காத்திரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமை தமிழர்கள் மத்தியிலும் சிறைக்கைதிகள் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது.

தமிழர்கள் விடயத்தில் உறுதி மொழிகளை வழங்குவதும் பின்பு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் காலதாமதத்தை ஏற்படுத்துவது போன்றும் கைதிகள் விடயத்திலும் மேற்கொள்ளப்படும் இவ்வாறான இலங்கை அரசின் நடவடிக்கைகளை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் இலங்கையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள அறவழிப் போராட்டத்திற்கு எமது முழு ஆதரவினையும் வழங்கி நிற்கின்றோம்.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு முரணாக இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளினை சர்வதேச நாடுகள் கண்டனம் செய்வதுடன் தமிழ் கைதிகளின் விடுதலையையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச நாடுகளிடம் எமது கோரிக்கையினை முன்வைக்கின்றோம்.

மேலும் பிரித்தானியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊடக சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பில் மேற்கொள்ளப்படும் எமது நடவடிக்கைகளுக்கு பிரித்தானிய வாழ் தமிழர்களின் தொடர்ச்சியான ஆதரவினையும் வேண்டி எமக்கு முழு ஒத்துழைப்பினையும் வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்

வணக்கத்துக்குரியமாதுளு வாவே சோபித தேரருடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன் என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

சோபித தேரர் எதிர்பார்த்த சமூக நீதிக்கான சமுதாயத்தையும் நல்லாட்சி அரசினையும் நாட்டில் கட்டியெழுப்புவதற்கு தன்னை அர்ப்பணிப்பதாக ஜனாதிபதி உறுதி மொழி அளித்தார்.

மறைந்த வணக்கத்துக்குரிய மாதுளுவாவே சோபித தேரரின் தகனக் கிரியைகள் பூரண அரச மரியாதைகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் பத்தரமுல்லை பாராளுமன்ற மைதானத்தில் இடம் பெற்றதுடன் இத்தகனக் கிரியையில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

வணக்கத்துக்குரிய மாதுளுவாவே சோபித தேரரின் மறைவு நாட்டுக்கும் சமூகத்திற்கும் மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகுமென குறிப்பிட்ட ஜனாதிபதி அன்னாரது கொள்கைகளையும் தொலைநோக்கினையும் முன்னெடுப்பதானது அன்னாருக்கு செய்யக்கூடிய உயரிய கௌரவம் ஆகுமென மேலும் தெரிவித்தார்.

இன்றைய யுகத்திற்குத் தேவையான பாரிய ஒரு பணியினை மேற்கொண்ட சோபித தேரரின் முயற்சியே தான் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு காரணமாக அமைந்தது என நினைவு கூர்ந்த ஜனாதிபதி, பிரதான இரு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்த தேசிய அரசாங்க எண்ணக்கருவும் அன்னாரின் ஆசீர்வாதத்துடனேயே கட்டியெழுப்பட்டது எனவும் தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் சிங்களம், தமிழ், முஸ்லிம் ஆகிய எதுவித பேதமுமின்றி பாதிக்கப்பட்ட மக்களுக்காக அன்னார் மேற்கொண்ட பணியினை ஜனாதிபதி நன்றியுணர்வுடன் நினைவுபடுத்தினார்.



பௌத்த தேரர்கள், சர்வமத தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரும் அமைச்சர்கள் மற்றும் பாராளுமனற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகள் மற்றும் நாட்டின் நாலா பக்கங்களிலுமிரு ந்து வருகைதந்திருந்த பெருமளவிலான பொதுமக்கள் ஆகியோரும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கேற்றனர். (இ)

# 2500 ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள்

2500 ஊடகவியலாளர்கள் மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக் கொள்ள தகுதி பெற்றுக்கொண்டுள்ளதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தினால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட உள்ள மோட்டார் சைக்கிள்களைப பெற்றுக் கொள்வதற்கான அடிப்படை தகைமைகளை 2500க்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் பூர்த்தி செய்துள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குவது குறித்த நேர்முகத் தேர்வுகள் பூர்த்தியாகியுள்ளன.ஏனைய நடவடிக்கைகள் நிதி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஊடகவியலாளர்கள் தாங்கள் விரும்பிய மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய முடியும்.

மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்ய பணம் வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு சில நடவடிக்கைகளை எடுக்கும் என அமைச்சர் கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## தொலைவு இருத்தல்

எனக்குத் தெரிந்த ஒருவர் இருந்தார். அவர் சொந்தமாக ஒரு கார் வைத்திருந்தார். அதில் ஏறி உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தார் என்றால் போதும் வழியில் வருபவர், போகிறவர்களை திட்டிக் கொண்டே போவார்.

இவர் மட்டும்தான் வீதியில் ஒழுங்காக செல்பவர் போலவும் மற்றவர்களெல்லாம் தாறுமாறாக போவது போலவும் அவருடைய நினைப்பு.

எதிரில் யாருமே வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதும் திட்டுவார்.

"என்ன றோட் இது...சுடுகாடு மாதிரி" என்பார். அப்படி ஒரு பழக்கம் அவருக்கு!

இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வசதியாக அமையக்கூடிய ஒரு தொழில்நுட்பம் தான் 'தொலைவு இருத்தல்' என்பது. அதாவது Telepresence இது ஒரு நவீன உத்திமுறை.

நம்மைத் தொலைவில் இருப்பதாக நினைக்கச் செய்யும் ஒரு தோற்ற அனுகூலம். இது எப்படியென்றால்...

காரோட்டுபவர் காரில்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவர் இன்னொரு ஊரில் கூட இருக்கலாம்.

அதாவது ஒரு மதுரையில் உட்கார்ந்து கொண்டு சென்னை அண்ணாசாலையில் காரோட்டலாம். வழியில் வருபவர், போகிறவர்களை திட்டலாம். வம்பு வராது, ஏனெனில் அவர்களின் காதில் இது விழாது.

இது எப்படியென்றால்...

தொலைவு இருப்பு முகமூடி ஒன்றை தலையில் மாட்டிக் கொள்ள வேண்டும். அந்த முகமூடிக்குள் சின்னத் திரை இருக்கும். நீங்கள் இதை மாட்டிக் கொண்டு மதுரையில் ஒரு குளிர்சாதன அறைக்குள் கணிப்பொறிப் பெட்டிகளுக்கு மத்தியில் உட்கார்ந்திருக்கிறீர்கள்.

அந்தச் சின்னத்திரையில் சென்னையிலுள்ள அண்ணா சிலை தெரிகிறது. எதிரில் வரும் கார்... குறுக்கே போகும் சைக்கிள் எல்லாம் தெரிகிறது. கார் சாரதி ஆசனத்தில் நீங்கள் உட்கார்ந்திருந்தால் என்னென்ன தெரியுமோ அவையெல்லாம் அந்த சின்னத்திரையில் தெரியும்.

நீங்கள் பாட்டுக்கு மதுரையில் ஓர் அறைக்குள் உட்கார்ந்து கொண்டே சென்னையில் காரை செலுத்திக் கொண்டு போகலாம். சைக்கிள் குறுக்கே வருகிறதா... சடாரென வண்டியை நிறுத்தலாம். இடதுபக்கம் முந்தி ஒரு ஸ்கூட்டர் வேகமாக போகிறதா... அதை விரட்டிப் பிடிக்கலாம்.

சென்னை அண்ணாசாலையில் நீங்கள் வண்டி ஓட்டுவது நிஜம். ஆனால், மதுரையில் உங்கள் முகமூடிக்குள் தெரிவது மாயத்தோற்றம்... அதை மாய நிஜம் அல்லது மாய யதார்த்தம் என்று சொல்கிறார்கள். Virtual Reality

விண்வெளி ஆராய்ச்சிக்கெல்லாம் இந்தத் தொழில்நுட்பம் மிகவும் உபயோகம். இயந்திர மனிதர்களை செவ்வாய்க் கிரகத்தில் இறக்கி விட்டுவிட வேண்டியது. இங்கே முகமூடியை மாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டே அவர்களை வேலை செய்ய வைக்கலாம். எந்தப்பக்கம் போக வேண்டுமோ – போக வைக்கலாம். மண்ணைத் தோண்டி எடுக்க வேண்டுமா – எடுக்க வைக்கலாம். அங்கு போய் நாம் என்ன செய்ய நினைக்கிறோமோ அவற்றையெல்லாம் இங்கிருந்தே செய்யலாம்.

பூமியில் இருக்கும் கட்டுப்பாட்டு அறைக்குள் இருந்து கொண்டு முகமூடியை மாட்டிக் கொண்டு கை,கால்களில் மின்னணு உணர் கருவிகளை பதித்துக் கொண்டு செவ்வாய் கிரகத்திலுள்ள மின்னணு கருவிகளை இயக்கலாம்.

செவ்வாய் கிரகத்தில் சேகரிக்கப்படும் தகவல்கள் மின்காந்த அலைத் தொடர்பு வழியாக பூமிக்கு வந்து சேர குறைந்தது 20 நிமிடமாவது எடுக்கும். ஆனால், இந்த முகமூடியைப் போட்டிருப்பவர் உடனுக்குடன் அங்கே பார்ப்பதை நேரடி வர்ணனை செய்யலாம்.

இந்த மாயத்தோற்ற அறிவியல் எதிர்காலத்தில் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்யப்போகிறது.

ஒரு பேருந்து ஓட்டுநர் திடீரென்று சிரிக்கத் தொடங்கினாராம்.

"ஏன் சிரிக்கிறீங்க?'' என்று கேட்டிருக்கிறார் பக்கத்திலிருந்தவர்.

"துன்பம் வரும்போது சிரிக்கச் சொல்லியிருக்கிறார்கள் பெரியவர்கள். அதனால் சிரிக்கிறேன்" என்றார்.

"இப்பொழுது யாருக்குத் துன்பம்?" என்றார் இவர்.

"நம் எல்லோருக்கும்தான் என்றார்" அவர்.

"எப்படிச் சொல்றீங்க?" என்றார்.

"எதிரில் பாருங்க ஒரு சக்கரம் உருண்டு ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

"அந்தச் சக்கரத்துக்கும் நம் துன்பத்துக்கும் என்ன சம்பந்தம்?''

"அது நம்முடைய பேருந்திலிருந்து தான் கழன்று ஓடிக் கொண்டிருக்கிறது" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நீரிழிவு நோய் 7 அறிகுறிகள்

**நீரிழிவு நோய்**

நீரிழிவு என்றால் உடலில் குளுக்கோசின் (சீனி) அளவு ஒரு குறிப்பிட்ட அளவிலும் அதிகரித்தல்.

FBS-126mg/dl or 7mm ol/l

PPBS-200mg/dl or 11.1mm ol/l

உடலில் போதியளவு இன்சுலின் உற்பத்தி செய்யப்படாத போது அல்லது இன்சுலினை உடலானது சரியான அளவில் பயன்படுத்தாத போது நீரிழிவு ஏற்படுகிறது. இன்சுலின் குருதியிலுள்ள வெல்லத்தினளவை சீர் செய்யும் ஒரு ஓமோன் ஆகும். குருதியில் உயர் குளுக்கோசின் அளவு உடலில் பல்வேறு சீர் கேடுகளை ஏற்படுத்துகிறது.

நீரிழிவில் வேறுபட்ட வகைகள் உள்ளன.

**வகை 1, வுகை 2**

**வகை 1**

நீரிழிவானது பொதுவாக சிறுவர்களுக்கு ஏற்படும். இவ்வகை நீரிழிவில் சதையியானது இன்சுலினை உற்பத்தி செய்யத் தவறிவிடுவதால் ஏற்படுகிறது. இவர்கள் இன்சுலினை ஊசி மூலம் பெறவேண்டும்.

**வகை2**

நீரிழிவானது பெரும்பாலும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஏற்படுகிறது. இவ்வகை நீரிழிவில் சதையியால் போதியளவு இன்சுலின் சுரக்கப்படுவதில்லை. அவ்வாறு சுரக்கப்படுவதும் சிலவேளைகளில் உடலால் முறையாக பயன்படுத்தப்படுவதில்லை.

இவர் களின் குருதியில் உயர் வெல்ல மட்டமானது உண வுப் பழக்கங்களாலோ அல் லது மாத்திரைகளாலோ கட்டுப்படுத்தலாம். ஆனால் சில நோயாளிகள் இன்சுலினை உள்ளெடுக்க வேண்டி வரலாம்.

**நீரிழிவு உங்கள் உடலை பாதிக்கின்றது**

குருதியில் வெல்ல அளவு கட்டுப்படுத்தப்படாவிடில் உடலிலுள்ள சிறிய குருதிக்கலன்கள் பாதிக்கப்படுகிறது. இதனால் சிறுநீரகங்கள், கண்கள், தோல், நரம்புகள், தசைகள், குடல், இருதயம் என்பன பாதிக்கப்படுகின்றது.

**நீரிழிவு சிறுநீரகங்களை பாதிக்கின்றன**

சிறுநீரகங்களிலுள்ள குருதிக்கலன்கள் பாதிப்படைவதால் சிறுநீருடன் புரதம் (அல்புமின்) வெளியேறும். பின்பு சிறுநீரகங்களால் குருதியை சரியான முறையில் சுத்திகரிக்க முடியாது. இதனால் மேலதிக நீர், உப்புகள், நைதரசன் கழிவுப் பொருட்கள் (யூரியா) உடலில் அதிகரிக்கின்றது. இதனால் நிறை கூடும். உடலில் வீக்கம் ஏற்படும். நீரிழிவு நரம்புகளையும் சிதைவடையச் செய்கின்றது. இது சிறுநீர் கழிக்கும் செயற்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, சிறுநீர்ப்பையிலுள்ள அதிக சிறுநீரால் ஏற்படும் அமுக்கம் சிறுநீரகங்களைச் சிதைவடையச் செய்வதோடு சிறுநீர் அதிக நேரம் சிறுநீர்ப்பையில் தேங்குவதன் காரணமாக தொற்றுதல்கள் ஏற்படும்.

இதற் குக் காரணம் சிறுநீரில் அதிகளவில் வெல்ல மிருப்பதால் பக்டீரி யாக்கள் விரைவாகப் பெருக்கமடைதலாகும்.

நீரிழிவு நோயாளர்கள் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

வகை: 1 ஏறத்தாழ 30%

வகை: 2 ஏறத்தாழ 40%

**நீரிழிவு நோயின் 7 அறிகுறிகள்**

தவறான வாழ்க்கை முறையின் காரணமாகத்தான் வகை 2 நீரிழிவு நோய் உள்ளது. நீரிழிவு நோய் பற்றிய பயம் இருந்தாலும் போதிய விழிப்புணர்வு இல்லாததால் பலரும் பாதிக்கப்படுகின்றனர்.

வகை 2 நீரிழிவு நோய் 40 வயதுக்கு மேல்தான் வரும்.

அந்த நேரத்தில் உடல் எடையைக் குறைத்தல், கட்டுக்குள் வைத் திருத்தல், உடற்பயிற்சி, சரிவிகித உணவு என்று கவனமாக இருந்தால் நிச்சயம் நீரிழிவு நோய் வராமல் தடுக்க முடியும். மேலும் சில அறிகுறிகளைத் தெரிந்து வைத்திருப்ப தன் மூலம் ஆரம்பகட்டத்திலேயே கண்டறிந்து நீரிழிவு நோயைத் தடுக்க முடியும்.

**இன்று சர்வதேச நீரிழிவு தினமாகும் (World Diabetes day) இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**



**அதிக தாகம்**

நீரிழிவு நோயின் முக்கிய அறிகுறி தாகம். வழக்கத்துக்கு மாறாக தண்ணீர் குடிக்கிறீர்கள் என்றால் கொஞ்சம் கவனத்துடன் இருக்க வேண்டும்.

வைத்தியர்கள் தினமும் இரண்டரை லீற்றர் தண்ணீர் குடிக்கச் சொல்கிறார்கள். நாமும் இப்போது நிறைய தண்ணீர் குடிக்கிறோமே என்று அசட்டையாக இருந்து விடக்கூடாது.

திடீரென்று நம்மையும் அறியாமல் அதிக தாகம் எடுத்து நிறைய தண் ணீர் குடிக்கிறோம் என்றால் அது நீரிழிவு நோயின் அறிகுறி யாக இருக்கலாம்.

இரத்தத்தில் சக்கரையின் அளவு அதிகமாக இருக்கும் போது அதை வெளியேற்ற நம்முடைய சிறுநீரகங்கள் அதிகமாக வேலை செய்கின்றன. இதனால் உடலில் உள்ள நீர்ச்சத்து குறைந்துவிடுகிறது. இதை ஈடு செய்வதற்காக தாகம் அதிகரிக்கிறது.

**அடிக்கடி சிறுநீர் கழித்தல்**

இரத்தத்தில் உள்ள சர்க் கரையை வெளியேற்ற சிறு நீரகம் முயற்சிக்கும்போது உடலில் உள்ள நீரின் அளவு குறைகிறது. இதனால் அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. வழக்கத்துக்கு மாறாக அதிக அளவு சிறுநீர் கழிக்கச் சென்றால் தூக்கத்தின் நடுவில் அடிக்கடி சிறுநீர் கழிக்க எழுந்தால் உடனடியாக மருத்துவரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.

**உடல் எடை குறைதல்**

சர்க்கரை அளவு அதிகரிக்கிறது என்றால் இன்சுலின் போதுமான அளவு சுரக்கவில்லை அல்லது அதன் செயல்திறன் போதுமானதாக இல்லை என்று அர்த்தம்.

செல்களுக்கு குளுக்கோசைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் சர்க்கரை இரத்தத்திலேயே இருப்பதால் எந்தக் காரணமும் இன்றி உடல் எடை தானாகக் குறைய ஆரம்பிக்கிறது.

**அதிக பசி**

வகை 2 நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின் செயல்திறன் குறைந்து விடுகிறது.

இதன்மூலம் செல்கள் குளுக்கோசைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் கணையமானது இன்னும் அதிக அளவில் இன்சுலினைச் சுரக்கத் தூண்டுகிறது.

இன்சுலின் அளவு அதிகமாக இருக்கிறது. இது மூளைக்கு இன்னும் குளுக்கோஸ் தேவை உள்ளதாக சமிக்ஞை செய்கிறது. இதனால் பசி எடுக்கிறது.

**வாய் உலர்தல்**

நீரிழிவு நோயாளிகளுக்கு எச்சில் சுரப்பு குறைவதால் வாய் உலர்தல் பிரச்சினை ஏற்படும்.

சில மருந்துகள் எடுப்பதன் காரணமாகவும் வாய் உலர்தல் பிரச்சினை ஏற்படலாம். வாய் உலர்தல் பிரச்சினை தொடர்ந்தால் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியம்.

**அதிகப்படியான சோர்வு**

நம் உடலில் உள்ள செல்கள்தான் குளுக்கோசைப் பயன்படுத்தி உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகின்றன.

செல்களுக்கு போதுமான அளவு குளுக்கோஸ் கிடைக்கவில்லை. நீர்ச்சத்தும் வெளியேறிக்கொண்டே இருக்கிறது எனில் உடலில் சோர்வும் தளர்ச்சியும் ஏற்படும். உடலில் நீர்ச்சத்து குறைவதால் தலைவலியும் ஏற்படுகிறது.

**பார்வை மங்குதல்**

இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரிக்கும் போது அது கண்ணின் விழித்திரைப் பகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனால் பார்வை மங்கலாகும். இவர்கள், நீரிழிவு நோய் மருத்துவரை அணுகி சிகிச்சை பெறுவதன் மூலம் ஆரம்ப நிலையிலேயே இந்தப் பிரச்சினையை சரிசெய்ய முடியும்.

காலில் மதமதப்பு அல்லது காலில் ஊசி குத்துவது போன்று சுறுக்சுறுக்கென வலி, காயங்கள் நீண்ட நாட்களாக ஆறாமல் இருந்த பெண்களுக்கு பிறப்பு உறுப்பில் நமைச்சல், அடிக்கடி நோய்த் தொற்று ஏற்பட்டால் சர்க்கரை அளவை பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

# சமுர்த்தி பணத்தை அரசியல்வாதிகள் கையாள முடியாது

## அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு

சமுர்த்தி மற்றும் திவிநெகும கணக்குகளில் உள்ள பொது மக்களின் பணத்தை அரசியல் வாதிகள் கையாள முடியாது எனவும் அந்தப் பணம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்த வேண்டும் எனவும் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை சுற்றுலாத்துறை கட்டடத்தொகுதியில் நடைபெற்ற சமுர்த்தி லொத்தர் சீட்டிலுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சமுர்த்தி திட்டத்தை தவறான முறையில் கையாண்டுள்ளமையால் அமைச்சரவை பத்திரமொன்றின் ஊடாக மீண்டும் சமுர்த்தி திணைக்களமாக மாற்ற வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

வங்கிக் கணக்கில் உள்ள சுமார் 100 கோடி ரூபா பணத்தை வீட்மைப்பு உள்ளிட்ட மக்களின் வாழ்வாதாரத்திற்கு பயன்படுத்த வேண்டுமே ஒழிய, ஆறு வீத வட்டிக்கு வர்த்தக வங்கிகளில் அதனை வைப்புச் செய்வது நியாயமற்ற செயற்பாடு என அமைச்சர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

1980 உலக சுகாதார ஸ்தாபனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் தாய் சேய் மரண அறிக்கையின் பிரகாரம் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, 26 வீதமாக இருந்த வறுமை ஆறு வீதம் வரை குறைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் 3 வீதமானோருக்கு மின்சாரம் இல்லாமையால் அவர்களுக்கு மின் இணைப்பை பெற்றுக் கொள்வதற்கு சமுர்த்தி வங்கியின் ஊடாக கடன் உதவி வழங்கப்படுவதாகவும் சமூகவலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



சமுர்த்தி உத்தியோகத்தர்கள் திருமண வைபவத்தின் போதும் பிறப்பு ,இறப்பு நிகழ்வுகளின் போதும கிராமத்திலே இருக்க வேண்டும் என்பதற்காக தாம் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வயலில் 4 பாம்பைக் கொன்றபோது குதிக்காலை தீண்டியது 5வது பாம்பு

## உசன் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)


வயற்காணி வரம்பில்படுத்திருந்த நான்கு பாம்பைக் கொன்ற நபர் அதே வரம்பில் கிடந்த இன்னுமொரு பாம்பினால் கடியுண்ட சம்பவம் மிருசுவில் உசன் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி தனங்கிளப்பில் வசிக்கும் 35 வயதுடைய சிவராசா சிவகாந்தன் என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார்.

உசன் பகுதியிலுள்ள தனது காணியைப்பார்ப்பதற்குச் சென்ற அவர் வயற்காணியின் வரம்பில் பாம்புகள் பல படுத்திருப்பதைக் கண்டுள்ளார். இதனையடுத்து ஒவ்வொன்றாக நான்கு பாம்பை அடித்துக் கொன்ற போது இன்னொரு பாம்பு அவரது குதிக்காலைத் தீண்டியுள்ளது.

தற்போது அதிக மழைவீழ்ச்சி காரணமாக புற்றுகளில் மழைநீர் தேங்குவதையடுத்து பாம்புகள் ஊருக்குள் படையெடுக்கின்றன.

இதனால் பொதுமக்கள் அச்சத்துடன் நடமாடவேண்டியுள்ளது.(3)



நல்லூர் றோட்டறிக் கழகமும் யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பும் இணைந்து அண்மையில் மாபெரும் இரத்ததான முகாம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.அதனை படங்களில் காணலாம்.

# விண்ணிலிருந்து வந்த மர்மப்பொருள் வானில் வெடித்து சிதறியதாம்

இலங்கையின் தென் கடற்பகுதியில் விழும் என்று எதிர்வு கூறப்பட்டிருந்த WT 1190F எனப் பெயரிடப்பட்டுள்ள மர்மப்பொருள் வானிலேயே வெடித்து சிதறிவிட்டதாக இலங்கை கோளரங்கம் அறிவித்துள்ளது.

காலியிலிருந்து 65 கடல்மைலுக்கு அப்பால் கடலில் விழும் என்று எதிர்பார்க்கப்பட்ட மர்மப்பொருளின் ஒருபகுதி தங்காலை வான்பரப்பில் தீப்பிழம்பை கக்கி வெடித்து சிதறிவிட்டதாக வானில் விமா னத்தில் இருந்து கொண்டு கண் காணிக்கின்ற கல்ப் கண்காணிப்பு குழுவினால் உறுதிப படுத்தப்பட்டுள்ளதாக கோளரங்கம் அறிவி த்துள்ளது.

அந்த கண்காணிப்பு குழுவினால், ஆதர் சி.கிளார்க் மத்திய நிலையத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவினர் பயணித்த விமானம், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

வெடித்து சிதறிய மர்மப் பொருளின் சிதைவுகள் கடலில் விழவில்லை என்றும் அந்த கண்காணிப்பு குழுவினர் உறுதிப்படுத்தினர் என்று கோளரங்கம் அறிவித்துள்ளது.

WT 1190F எனப் பெயரிடப்பட்டுள்ள மர்மப்பொருள் விண்வெளியில் இருந்து இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 11.48 இற்கு, இலங்கையின் தென் கடற்பகுதியில் விழும் என்று ஏற்கனவே எதிர்வு கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-10)

# பொதுநிலை நற்கருணைப் பணியாளர் இறையரசுப் பணியின் பங்குதாரர்

## நியமன நிகழ்வில் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தீர்மானத்தின் படி குருக்களும் துறவிகளும் பொது நிலையினரும் ஒன்றிணைந்து இறைபணியில் இறை அரசை நோக்கிய பயணத்தை மேற்கொள்ள வழங்கிய அங்கிகாரமே பொதுநிலை நற்கருணைப் பணியாளர்களின் நியமனமாகும் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி சுண்டிக்குளி புனித யோவான் ஆலயத்தில் நடைபெற்ற பொது நிலை நற்கருணைப் பணியாளர் நியமனத் திருப்பலி நிகழ்வில் மறையுரையாற்றும் போதே ஆயர்இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சுண்டிக்குளி பங்கைச் சேர்ந்த ஆ.ப. யூலியன், அ.ச. அந்தோனிப்பிள்ளை, இ. யோண்சன் ஆகிய மூவரும் நற்கருணைப் பணியாளர்களாக நியமனம் பெற்றனர்.

ஆயர் தமது மறையுரையில்,

திவ்விய நற்கருணை பகிர்தலிலும் நற்கருணை விசுவாசத்தை மக்கள் மத்தியில் பரப்பவும், நோயாளர்களை அவர்களது இல்லங்களில் தரசித்து அவர்களுக்கு நற்கருணை வழங்கவும் இப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அண்மையில் புதிய மறை மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்ட திருகோணமலை மறை மாவட்டத்திலும பொதுநிலை நற்கருணைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு சிறப்பான பணி இடம்பெறு வதாக ஆயர் மேலும் தெரிவித்தார்.

ஆலய அருட்பணிச் சபையின் செயலாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான சொலமன் சூ.சிறில் தனது வாழ் த்துரையில், இறைவார்த்தையும் திவ்விய நற்கருணையும் கிறிஸ்தவ வாழ்வின் மையங்களாக விளங்குகின்றன. விசுவாச வாழ்விற்கும் தூய வாழ்விற்கும் இவை அச்சாரமாக விளங்குகின்றன.

யாழ்.தலத்திருச்சபை தன்னைப் புதுப்பித்துக் கொண்டு புத்தெழுச்சியுடன் பணியாற்றி இறையாட்சியைக கட்டியெழுப்ப பொது நிலை நற்கருணைப் பணியாளரின் நியமனம் ஒரு உந்துதலாக அமையும் என்று அவர் தெரிவித்தார். (3)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 545

Search for people, places and things

விஜயகாந்




தவசீலன்




ராயு




நிலானி




அம்முக்குட்டி




கௌதம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மாற்றத்தை விரும்பியவர்கள் இன்று ஊமையாகியுள்ளனர்

## கனக ஹேரத் கவலை

மாற்றத்தை விரும்பி வாக்களித்தவர்கள் இன்று ஊமையாகியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய அவர்,

மாற்றம் ஏற்படும் எனக் கருதி கடந்த தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு உண்மையான மாற்றம் ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தவர்களும் மௌனித்துப்போயுள்ளனர். பிழை செய்தது அவர்களுக்கு தெரிந்துள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்வோம் எனவும் கனக ஹேரத் தெரிவித்தார். (இ-7-10)

# அனைத்து பேருந்துக்களும் பதிவு செய்யப்பட வேண்டும்

மாவட்டங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் அனைத்துப் பேருந்துக்களும் பதிவு செய்யப்படல் வேண்டும் என வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் சி.சிவபரன் தெரிவித்துள்ளார்.

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் கடந்த 4 ஆம் திகதி வடமாகாணப் போக்குவரத்து அமைச்சர் தலைமையின் கீழ் அண்மையில் இடம்பெற்றது.

இதன்போதே சங்கத்தின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த விடயம் தொடர்பில் தெரிய வருவதாவது,

எதிர்வரும் காலங்களில் பேருந்து உரிமையாளர்களின் நலன்களைப் பேணுவதற்கும் அவர்களின் தொழிற் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துவதுடன் அவர்களுக்கான வழியனுமதிப் பத்திரம் வடமாகாண சபை ஊடாக வழங்கப்படவுள்ளது.

இதற்கு அமைவாக வடமாகாணத்தில் மாவட்டங்களுக்கிடையில் தற்போது சேவையில் ஈடுபடும் அனைத்து உரிமையாளர்களும் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தற்காலிக வழியனுமதியுடன் சேவையில் ஈடுபடும் அனைத்து பேருந்து உரிமையாளர்களும் தங்களிடமுள்ள ஆவணங்களை உறுதிப்படுத்தி வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தில் பதிவினை மேற்கொண்டு அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

மேலும் இச்சங்கத்தில் பதிவு செய்தவர்களின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் நிரந்தர வழியனுமதி வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என வடமாகாணப்போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரியப்படுத்தியுள்ளார் என்பதை வடமாகாணத்திற்குள் மாவட்டங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் அனைத்து உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

### வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் 13.11.2015
### மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை


| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 139.78 | 144.08 |
| பவுண்ட் | பிரிட்டன் | 211.84 | 219.99 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 149.76 | 156.27 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 138.50 | 144.77 |
| டொலர் | கனடா | 104.41 | 109.08 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 98.68 | 103.66 |
| டொலர் | சிங்கப்பூர் | 98.04 | 102.13 |
| யென் | ஜப்பான் | 1.1331 | 1.1817 |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 376.5405 |
| குவைத் | டினார் | 467.2920 |
| ஓமான் | ரியால் | 368.5827 |
| கட்டார் | ரியால் | 38.9950 |
| சவுதி அரேபியா | ரியால் | 37.8533 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 38.6495 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்.உலகத் தமிழ் மாநாட்டில் பொலிஸ் தாக்குதல் 35



...தமிழ் நாட்டுக் கடற்கரையில் இருந்து 12 மைல் தூரத்தில் உள்ள கச்சதீவை, இலங்கைக்கு இந்தியா தானமாகக்கொடுத்தது.

இதற்கான ஒப்பந்தத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியும் இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்காவும் 1974 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி கையெழுத்திட்டனர்.

**ராமேஸ்வரம் அருகே**

தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையில் உள்ளது கச்சதீவு. ராமேஸ்வரத்தில் இருந்து ஏறத்தாழ 12 மைல் தூரத்தில் இருக்கிறது.

முன்பு இந்தத் தீவு ராமநாதபுரம் ராஜாவின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது.

ஆனால் இது தங்களுக்கே சொந்தம் என்று சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை உரிமை கொண்டாடியது.

இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த ஜனவரி மாதம் டெல்லி வந்திருந்தபோது பிரதமர் இந்திரா காந்தியுடன் இது பற்றி பேச்சு நடத்தினார்.

கச்சதீவு பிரச்சினையில் உட்பாடு காணப்பது என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

**எதிர்ப்பு**

கச்சதீவு தமிழ்நாட்டுக்கே சொந்தம். அதை இலங்கைக்குத் தரக்கூடாது என்று தமிழக அரசு வற்புறுத்தி வந்தது. முதலமைச்சர் கருணாநிதி பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்தபோது இதை வலியுறுத்தினார்.

**தானம்**

இருந்தபோதிலும் கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பது என்று இந்திய அரசு முடிவு செய்துவிட்டது.

28.06.1974 அன்று கச்சதீவு பற்றிய ஒப்பந்தத்தை இலங்கையில் இருந்து வெளிநாட்டு இலாகா காரியதரிசி ஜெயசிங்கே டெல்லிக்கு விமானத்தில் கொண்டு வந்தார். அதில் இந்திரா கையெழுத்திட்டார். அதேபோல டெல்லியில் இருந்து வெளிநாட்டு இலாகா காரியதரிசி கெவல் சிங், கச்சதீவு ஒப்பந்தத்தை இலங்கைக்கு கொண்டு சென்றார். அதில் இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கையெழுத்திட்டார். இரண்டு பிரதமர்களும் ஒரே நேரத்தில் கையெழுத்து போடுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

**280 ஏக்கர்**

கச்சதீவு 280 ஏக்கர் பரப்புள்ளது. கிழக்கு மேற்காக ஒரு மைல் நீளமும் தெற்கு வடக்காக அரை மைல் அகலமும் உள்ளது.

அங்கு கிறிஸ்தவ கோவில் ஒன்று இருக்கிறது. ஆண்டு தோறும் கச்சதீவில் திருவிழா



நடைபெறும்போது இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் கிறிஸ்தவர்கள் படகுகளில் செல்வார்கள்.

இருதேசங்களையும் சேர்ந்த மீனவர்களும் கச்சதீவுக்குச் சென்று மீன்பிடிப்பது உண்டு. அங்கு குடிதண்ணீர் இல்லையாதலால் மக்கள் நிரந்தரமாக வசிக்கவில்லை.

**கருணாநிதி**

முதலமைச்சர் கருணாநிதியை நிருபர்கள் பேட்டி கண்டு கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பதற்கு முன்னால் மாநில அரசின் கருத்து கேட்கப்பட்டதா? என்று கேட்டனர்.

அதற்கு பதில் அளித்து அவர் கூறியதாவது:-

இரண்டு வாரங்களுக்கு முன்னால், வெளிநாட்டு இலாகா செயலாளர் கேவல் சிங் இங்கு வந்தபோது என்னிடம் அதுபற்றி சில விபரங்களை விவாதித்தார். கச்சதீவு விடயத்தில் தமிழ் மக்களுடைய உணர்ச்சியை நான் அவரிடத்தில் விளக்கி இருக்கிறேன் என்று கருணாநிதி கூறினார்.

**கண்ணீர்**

ராமநாதபுரம் ராஜா ராமநாதசேதுபதி நிருபர்களிடம் கூறுகையில் மத்திய அரசின் முடிவு வருத்தத்தைத் தருகிறது. கண்ணீர் விட்டு அழுவது தவிர வேறு வழி இல்லை என்றார்.

**ஒப்பந்த விபரம்**

கச்சதீவு ஒப்பந்தம் பற்றிய அறிக்கை ஒன்றைப் பாராளுமன்றத்தில் வெளிநாட்டு இலாகா மந்திரி சுவரண்சிங் தாக்கல் செய்தார்.

அதில் கூறப்பட்டு இருந்ததாவது:-


தமிழ் நாட்டில் இருந்து 12 1/2 மைல் தூரத்தில் இலங்கையில் இருந்து 10 1/2 மைல் தூரத்திலும் இருக்கும் கச்சதீவில் இலங்கையைச் சேர்ந்தவர்களோ, இந்தியாவைச் சேர்ந்தவர்களோ எப்பொழுதும் நிரந்தரமாக குடியிருந்தது இல்லை.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமா? அல்லது இலங்கைக்குச் சொந்தமா? என்ற பிரச்சினை இருந்தது. (தொடரும்)

# விஜயதாஸ ராஜபக்ஷ யார்?

## கோத்தாவை கைது செய்ய விடமாட்டேன் என்று கூறுவதற்கு அவருக்கு உரிமை இல்லை

### ராஜித சேனாரட்ன கேள்விக்கணை



முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய விடமாட்டேன் என்று கூறுவதற்கு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யார்? அவ்வாறு கூறுவதற்கு அவருக்கு என்ன உரிமை உள்ளது? அவர் அதனை தீர்மானிக்க முடியுமா? அப்படியானால் எதற்கு நீதிமன்றம் இருக்கின்றது. நீதி அமைச்சர் இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியுமா? எனறு அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான டாக்டர் ராஜித சேனாரட்ன கேளவிகளை எழுப்பியுள்ளார்.

நாட்டின் பிரதம நீதியரசரே இவ்வாறு கூற முடியாது. நீதி அமைச்சர் இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியுமா? அப்படியானால் நீதிமன்ற கட்டமைப்பு இருப்பதன் அர்த்தமென்ன.? இவ் வாறு விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவதன் மூலம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளக விசாரணைக்கு கோரும் தமிழர் தரப்பின் கோரிக்கை நியாய மாகின்றது அல்லவா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

அவன்கார்ட் விவகாரம் குறித்த கலந்துரையாடலின போது எதுவும் பேசாத விஜயதாஸ ராஜபக்ஷ வெளியில் வந்து கருத்து வெளியிடுவதில் என்ன அர்த்தம்? மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்க முடியாமல் விஜயதாஸ ராஜபக்ஷ ஐ.தே.கவுக்கு கட்சி மாறியவர். ஆனால் நாங்கள் மகிந்தவை கவிழ்த்தோம் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கேள்வி:- அவன்கார்ட் விவகாரம் தொடர்பில் புதிய நிலைமை என்ன?

பதில்:- அது உங்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம் தானே. அதாவது அவன்கார்ட் நிறுவனத்தின் செயற்பாடுகள் அனைத்தையும் கடற்படையின் கீழ் கொண்டுவருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன இது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்படுவதற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்தக் கூடடத்தில் பாதுகாப்புத் தரப்பினர அமைச்சர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர். இதன் போது அவன்கார்ட் விவகாரம் தொடரபில் முழுமையான விளக்கமளிக்கப்பட்டது.

கேள்வி:- இவ்வாறு கடற்படையினருக்கு, அவன்கார்ட் நிறுவன செயற்பாடுகளை வழங்கவில்லையென அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளாரே?

பதில்- விஜயதாஸ ராஜபக்ஷ எவ்வாறு இதனை கூறமுடியும். அவர் இந்தக் கூட்டத்தில் எந்தவொரு கருத்தையும் வெளியிடவில்லையே? அப்படியாயின் கலந்துரையாடலின் போது அவர் கருத்து வெளியிட்டிருக்கலாமே? கலந்துரையாடலின் போது எதனையும் கூறாமல் வெளியில் வந்து இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவது அர்த்தமில்லைதானே. அவர் எப்படி இந்த விடயத்தை வெளியில் கூற முடியும்?

கேள்வி:- கட்சி மாறி பயந்துகொண்டு செயற்பட முடியாது என்று விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளாரே?

பதில்:- விஜயதாஸ ராஜபக்ஷவும் கட்சி மாறியவர்தானே. அவர் தானே முதலில் ஐ.தே.க.வுக்கு தாவினார். மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்க முடியாமல் ஐ.தே.கவுடன் இணைந்து கொண்டவர்தான் விஜயதாஸ ராஜபக்ஷ. அன்று அவர்களினால் மகிந்தவின் அரசாங்கத்தை கவிழ்க்க முடியவில்லை. ஆனால் நாங்கள் கவிழ்த்தோம். ஆனால் எங்களுக்கு முன்னரே விஜயதாச கட்சி மாறிவிட்டார். அவர் எங்களைப் பற்றி பேச முடியாது.

கேள்வி:- ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் ஏன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்து கொள்ளவில்லை. ?

பதில்:- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் அலரி மாளிகையில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வு காரணமாக பிரதமர் வரவில்லை. எனினும் அலரி மாளிகை நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஜனாதிபதி தலைமையிலான விசேட கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்நிலையில் நாங்கள் ஜனாதிபதி தலைமையில் கூட்டத்தை நடத்தி தீர்மானங்களை எடுத்தோம்.

கேள்வி:- அவன்கார்ட் விவகாரத்தை கடற்படையினால் எடுத்து நடத்த முடியாது என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளாரே?

பதில்:- இல்லை. கடற்படையினரால் அதனை எடுத்து நடத்த முடியும். ஏற்கனவே கடற்படையினர் தான் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டனர். இடைநடுவில்தான் அவனகார்ட் நிறுவனம் வந்தது. எனவே கடற்படையினால் செய்ய முடியும். அத்துடன் கடற்படை தளபதியும் ஜனாதிபதி தலைமையிலான கலந்துரையாடலின்போது நீண்ட விளக்கத்தை அளித்தார். சட்டமா அதிபரின் சார்பாக வந்த பிரதிநிதியும் இவ்வாறு கடற்படையின் கீழ் கொண்டு செல்வது சிறந்தது என்று கூறினார்.

கேள்வி:- அவன்கார்ட் தொடர்பாக நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தின் போது உங்களின் பேச்சை ஒருவர் ஒலிப்பதிவு செய்ததாக கூறப்படுகிறது. அவர் யார்?

பதில்:- நீங்கள் ஊடகவியலாளர்கள் புலனாய்வு செய்து அதனை கண்டுபிடியுங்கள்.

கேள்வி:- ஊடகமொன்றும் இதனுடன் தொடர்புபட்டுள்ளதாக கூறப்படுகிறதே?

பதில்:- செய்திகளை பார்க்கும் போது அவ்வாறு தோன்றுகிறது.

கேள்வி:- மாலைதீவில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்துடன் அவன்கார்ட் விவகாரம் தொடர்புபடுவதாக கூறப்படுகிறது. இது தொடர்பில் விசேட கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதா?

பதில்:- இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. உண்மையில் இந்த ஆயுதக்கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருவதற்காகவே அனுமதி பெறப்பட்டது. ஆனால் கப்பல் காலித் துறைமுகத்திற்கு வந்தது. இந்த கப்பலில் இருந்த கப்டன் யார் என இலங்கை தரப்பில் கோரப்பட்டபோது இலங்கையர் ஒருவரின் பெயர் கூறப்பட்டது. கப்பலில் இருந்த ஆயுதங்கள் தொடர்பிலும் தவறான தகவல்கள் வழங்கப்பட்டன. எனினும் கப்பலில் சென்று பார்த்தபோது 550 ரி. 56 ரக துப்பாக்கிகள் உட்பட 816 ஆயுதங்கள் அதில் இருந்தன. அது மட்டுமன்றி மாலைதீவு கடற்பரப்பின் ஊடாக இந்த கப்பல் வந்தபோது அதன் ஜி. பி.எஸ். இயந்திரம் நிறுத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் மாலைதீவு அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளது.

எக்காரணம் கொண்டும் கப்பலில் ஜி.பி.எஸ். இயந்திரத்தை நிறுத்த முடியாது என்பதை கடற்படைத் தளபதியும் கூறியுள்ளார். மேலும் ஒரு துறைமுகத்திலிருந்து இன்னொரு துறைமுகத்திற்கு கப்பல் புறப்படும் போது சென்றடையும் துறைமுகத்திடம் அனுமதி பெறவேண்டும். இந்த அவன்கார்ட் கப்பல் விவகாரத்தில் அந்த அனுமதியும் பெறப்படவில்லை. அதுமட்டுமன்றி கப்பலில் காணப்படுகின்ற ஆயுதங்கள் தொடர்பாகவும் உரிய பதிவுகள் இல்லை. அதனால்தான் பாதுகாப்பு அமைச்சு இந்த விடயத்தில் தவறு செய்துள்ளதாக நாங்கள் கூறுகிறோம்.

அப்போது பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தபாய ராஜபக்ஷவே இதற்கான உத்தரவை வழங்கியுள்ளார். எனவே தான் கோத்தபாய ராஜபக்ஷ தவறிழைத்துள்ளதாக கூறுகின்றோம். சுமார் 3000 ஆயுதங்களுக்கு உரிய பதிவுகள் இல்லை. மேலும் அனுமதிப் பத்திரங்களும் பெறப்படவில்லை. ரக்னா லங்கா நிறுவனத்திற்கு அனுமதிப்பத்திரம் பெறாமல் ஆயுதங்களை வழங்கலாம். ஆனால் அவன்கார்ட் நிறுவனத்திற்கு ஆயுதங்களை வழங்கும் போது அனுமதிபத்திரம் பெறவேண்டும். இங்கு அவ்வாறான அனுமதியும் பெறவில்லை. மேலும் 43 ஆயுதங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அதனால்தான் இவை தொடர்பில் விரிவான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

கேள்வி:- தவறுகள் இருப்பின் திலக் மாரப்பனவும், விஜயதாஸ ராஜபக்ஷவும் ஏன் இந்த விடயத்தை பாதுகாக்க முறபட்டனர் ?

பதில்:- அதனை அவர்களிடம் தான் கேட்கவேண்டும். இவ்வாறு பேசுகின்றவர்கள் ஜனாதிபதி தலைமையிலான கூட்டத்தின் போது எதனையும் கூறவில்லை. ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுப்பதில் மாத்திரம் பலனில்லை. உரிய இடத்தில் உரிய கருத்தை வெளியிடவேண்டும் என்பதே அவசியமாகும்.

கேள்வி:- அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோவும் உங்களின் கூற்றை எதிர்த்திருந்தாரே?

பதில்:- அவரின் அரசியல் அறிவு அவ்வளவுதான். இவர்களைப் போன்றவர்களும் அவ்வப்போது அரசியலுக்கு வருவதுண்டு.

கேள்வி:- கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய விடமாட்டோம் என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கூறியுள்ளாரே?

பதில்:- முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கைது செய்ய விடமாட்டோம் என்று கூறுவதற்கு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யார்? அவ்வாறு கூறுவதற்கு அவருக்கு என்ன உரிமை உள்ளது? அவர் அதனை தீர்மானிக்க முடியுமா? அப்படியானால் எதற்கு நீதிமன்றம் இருக்கின்றது. நாட்டின் பிரதம நீதியரசருக்கே இவ்வாறு கூற முடியாது. நீதி அமைச்சர் இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியுமா?

அப்படியானால் நீதிமன்ற கட்டமைப்பு இருப்பதன் அர்த்தமென்ன.? இவ்வாறு விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவதன் மூலம் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளக விசாரணைக்கு கூறும் தமிழர் தரப்பின் கோரிக்கை நியாயமாகின்றது அல்லவா? அதாவது இவ்வாறு அமைச்சர்கள் நீதி விடயங்கள் குறித்து தீர்மானம் எடுக்க முடியுமாயின் உள்ளக விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் அவசியம் என்ற கருத்து வலுப்பெறும் சாத்தியம் உள்ளது.

கேள்வி:- முன்னர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை பாராட்டியவர்கள் இப்போது தூஷிப்பதாக உங்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றதே?

பதில்:- அப்படியாயின் முன்னர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தூஷித்தவர்கள் இப்போது காப்பாற்ற முயலுகின்றனரே.? நான் அரசாங்கத்தில் இருக்கும் போது கோத்தபாய ராஜபக்ஷவை விமர்சித்தவன். யுத்தம் செய்த கோத்தபாய ராஜபக்ஷ சிறந்த மனிதர். ஆனால் யுத்தத்தின் பின்னர் செயற்பட்ட கோத்தபாய ராஜபக்ஷ தவறுகளை இழைத்தார். இதனை நான் முன்னரே அச்சமின்றி கூறியவன். பலர் அவருக்கு எதிராக எதனையும் கூறாமல் இருந்த காலத்தில் நான் அதனை பகிரங்கமாக கூறியவன். நான் பயப்படவில்லை.

கேள்வி:- இவ்வாறான பின்னணியில் தற்போதைய நிலைமையில் கோத்தபாய ராஜபக்ஷ என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

பதில்:- கோத்தபாய ராஜபக்ஷ ஒரு புத்திசாலி, எனவே அவருக்கு உண்மை தெரிந்தால் அவர் மௌனமாக இருக்கின்றார். ராஜபக்ஷக்களில் கோத்தபாய ராஜபக்ஷ ஒரு அறிவாளி என்றுதான் கூற வேண்டும். எது தவறு, எது சரி என்பது அவருக்கு தெரியும். அவர் மற்றவர்களை போன்றவரல்லர். எனவே அவருக்கு அனைத்தும் தெரியும்.

கேள்வி- எக்னெலிகொட விவகாரத்தையும், இந்த சம்பவத்துடன் தொடர்புபடுத்தி அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தாரே?

பதில்:- எக்னெலிகொட மற்றும் ரவிராஜ் விவகாரத்தில் ஆறு இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உரிய ஆயுதங்கள் வேறு சிலரிடமிருந்ததே இந்த இராணுவ அதிகாரிகள் கைதுக்கு காரணமாகும். இந்நிலையில் ஆறு ஆயுதங்கள் அனுமதியின்றி வேறு சிலரிடமிருந்தமைக்கு இராணுவ வீரர்கள் கைது செய்யப்படுவார்களாயின் 3000 ஆயுதங்கள் அனுமதியின்றி விநியோகித்தவர்கள் சுதந்திரமாக இருக்க முடியுமா? இது தவறு தானே! அதற்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டுமல்லவா? இவற்றுக்கான உத்தரவைப் பிறப்பித்தவர் தவறு செய்துள்ளார் தானே. ?

அப்படி பார்க்கும் போது இதற்கான உத்தரவை பிறப்பித்தவர் தவறு இழைத்துள்ளார்தானே? அதனை மறைக்க முடியுமா? அப்படி பார்க்கும் போது அக்காலத்தில் இதற்கான உத்தரவை முன்னாள் பாதுகாப்பு செயலாளரே விடுத்திருக்க வேண்டும். அதனால் தான் கோத்தபாய ராஜபக்ஷ தவறிழைத்துள்ளதாக நாங்கள் கூறுகின்றோம்.

எனவேதான் அரசாங்கம் மாறினாலும். அரசு இன்னும் மாறவில்லையென நான் அடிக்கடி கூறுகின்றேன். இப்பொழுதுதான் அரசையும் மாற்றி வருகிறோம்.

கேள்வி:- இவ்வாறு பாரிய தவறுகள் அவன்கார்ட் விவகாரத்தில் இருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால அந்த விவகாரத்தை பாதுகாப்பதற்கு இரண்டு அமைச்சர்கள் முயற்சிக்கின்றனர். அவர்களுக்கு எதிராக என்ன செய்யப் போகின்றீர்கள் ?

பதில்: அதனை ஊடகங்களே பார்க்கவேண்டும் நாங்கள் விமர்சனம் செய்து விட்டு இருந்து விடுவோம். ஊடகங்களே அதனை கிளர வேணடும் என அவர் மேலும் தெரிவித்தார்.




# வேலு வீட்டில் தங்கக்கட்டி!

..அதிக நாட்கள் அணிலை பெட்டிக்குள்ளேயே வைத்திருக்க முடியவில்லை.

தோட்டத்திலும் வீட்டிலும் புகுந்து புகுந்து வந்தது.

ஓய்வெடுக்க மட்டுமே பெட்டிக்குப் பக்கத்தில் சென்றது.

ஒருநாள், தன்னுடைய வண்ணப் பெட்டியிலிருந்து சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகிய நிறங்களைக் குழைத்து எடுத்து, அணிலின் வாலில் பட்டைபட்டையாகப் பூசிவிட்டான் வேலு.

வாலை சுழற்றிச் சுழற்றி வீசியபடி தோட்டம் முழுக்க சுற்றிச் சுற்றி வந்தது அணில்.

"எங்கே இருந்தாலும் இந்த நிறத்தை வெச்சு என் தங்ககட்டியைக் கண்டுபுடிச்சிடுவேன் என்று பெருமையோடு சொன்னான்.

ஒருநாள், வேலுவின் அத்தை குடும்பத்தினர் வந்திருந்தார்கள்.

அத்தையின் பிள்ளைகள், அணிலைத் தொட்டுப் பார்க்கவும் உள்ளங்கையில் ஏந்தவும் விரும்பினார்கள்.

உற்சாகத்தின் வேகத்தில் அளவு மீறி அணிலை அழுத்தி விட்டனர்.

அணில், அவர்களின் உள்ளங்கையில் சுரண்டிவிட்டது.

அவர்கள் அலறியதும், ஓடிச் சென்று மரத்தில் பதுங்கியது.

அம்மாவுக்கு வருத்தம்.

வேலுவிடம் சொல்லி, சொநதக்காரங்களா இருந்ததால பொறுத்துக்கிட்டாங்க.

வெளி ஆளா இருந்தா, சணடைதானே வரும்? பேசாம, அந்த அணிலை கோயில பக்கமா விட்டுரு என்றார்.

பயத்துல செஞ்சிருக்கும்மா. இனி அப்படி நடக்காமப் பார்த்துக்கலாம் என்றான் வேலு.

என்னஙக, உங்க வீட்டுக்குள்ளே அணில் எப்பவும் சுத்திக்கிட்டே இருக்குது.

கவனமா இருங்க.

சாப்பாட்டுப் பொருள்களில் வாயை வெச்சிடப்போகுது" என்று அக்கறைப் பட்டார் பக்கத்து வீட்டுக்காரர்.

திருப்பதி பிரசாதம் கொடுக்க வந்த எதிர்வீட்டுப் பெரியம்மா, கோழி, ஆடு, மாடு வளர்ப்பாங்க.

நீங்க அதிசயமா அணில் வளர்க்கிறீங்க? தடுப்பு ஊசி போட்டுக்கங்க என்று பயமுறுத்தினார்.

திருமணப் பத்திரிகை வைக்க வந்த மணியக்காரத் தாத்தா, அணில், குரங்கு எல்லாமே புராண காலத்தில் தெய்வத்துக்குத் துணையாக இருந்த உயிர்கள்.

அதை சரிசமமா, நம்மோடு வெச்சுக்கிறது தெய்வக்குற்றம் என்று குழப்பினார்.

இப்படிப் பேச்சு உருவாகும் ஒவவொரு முறையும் அம்மா வேலுவுக்கு அறிவுரை சொல்லி, அணிலை விட்டுவிடச் சொல்வார்.

வேலு, பேசிச் சமாளிப்பான்.

ஒருநாள் காலை நேரம்.

சிற்றுண்டி சாப்பிட கூடத்துக்கு வந்த அப்பா, அணிலின் வாலை மிதித்துவிட்டார்.

வலி பொறுக்காத அணில், கிறீச்' என்று சத்தம் எழுப்பியபடி அவர் காலில் கடித்துவிட்டது.

ஜன்னல் வழியாக எகிறிக் குதித்து தப்பியது.

நான் சாயங்காலம் வரும்போது, அது இங்கே இருக்கக் கூடாது என்று எச்சரித்து விட்டுப் போனார் அப்பா.

மாலை வரை காத்திருக்கவும் அம்மா தயாராக இல்லை.

வேலு பள்ளிக்குக் கிளம்பும் போது, ஒரு கைப்பையில் அணிலைப் பிடித்துக் கொடுத்து, போற வழியில் கோயில் தோட்டத்துல விட்டுரு என்றார்.

வேலுவின் முகம் சுருங்கியது.



அம்மா, அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

நீ விடலைன்னா, மதியம் நானே கொண்டுபோய் விட்டுருவேன் என்றார்.

தலைகுனிந்தபடி அந்தப் பையை வாங்கிக்கொண்டான் வேலு.

அணிலுடன் கழித்த நாட்களை, கோயில் வரை அசைபோட்டபடி நடந்தான்.

கோயில் தோட்டத்தில் பையைக் கவிழ்த்து, அணிலை ஓட விட்டான்.

தலையைத் திருப்பித் திருப்பி மிரண்டு பார்த்த அணில், வாலைச் சுழற்றியபடி ஒரு மரத்தின் மீது ஏறியது.

கிளைகளுக்குப் பின்னால் மறைந்து விட்டது.

அன்று முழுக்க பள்ளியில் வேலு யாருடனும் பேசவில்லை.

அணிலைப் பற்றிய நினைவாகவே இருந்தான்.

சாயங்காலம் வீட்டுக்குத் திரும்பும் வழியில், தோட்டத்துக்குள் எட்டிப் பார்த்தான்.

தங்கக்கட்டியின் முகம் எங்கேயும் தென்படவில்லை.

சத்தமாக "தங்கக்கட்டி" என்று கூப்பிட்டபடி தேடினான். அணிலைப் பார்க்கவே முடியவில்லை.

அடுத்த நாள் முதல் காலை, மாலை என இரண்டு வேளைகளிலும் கோயிலுக்குச் சென்று தேடியபோதும் வாலில் நிறம்பூசப்பட்ட அவனுடைய தங்கக்கட்டி, வேலு பார்வையில் படவே இல்லை.

அணிலின் குணத்தை மனிதர்கள் புரிந்துகொள்ளவில்லை. மனிதர்களைப் புரிந்துகொண்ட அது, விலகிச் சென்று விட்டது. (முற்றும்)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2015 14

- 1885 - செர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.
- 1889 - நெல்லி பிளை என்ற பெண் ஊடகவியலாளர் 80 நாட்களுக்குள் உலகைச் சுற்றி வரும் தனது திட்டத்தை 72 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடித்தார்.
- 1918 - செக்கொஸ்லவாக்கியா குடியரசாகியது.
- 1922 - பி.பி.சி தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் தொடக்கியது.
- 1956 - ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.
- 1963 - ஐஸ்லாந்து தீவின் அருகில் உள்ள சூர்ட்ஸி என்னும் தீவு வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது.
- 1965 - வியட்நாம் போர்: லாட்ராங் என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளுக்கும் வடக்கு வியட்நாம் படைகளுக்குமிடையில் பெரும் போர் வெடித்தது.
- 1969 - அப்பல்லோ திட்டம்: அப்போலோ 12 விண்கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.
- 1971 - மரைனர் 9 செவ்வாய் கோளை சென்றடைந்தது. இதுவே பூமியிலிருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.
- 1975 - மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.
- 1990 - கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பிற்குப் பின்னர் போலந்துக்கும் ஜேர்மனிக்குமிடையிலான எல்லைகள் வரையறுக்கப்ப ட்டன.
- 1991 - நாடு கடந்த நிலையில் வாழ்ந்த கம்போடியாவின் இளவரசர் நொரொடோம் சிஹானூக் 13 ஆண்டுக ளின் பின்னர் புனோம் பென் திரும்பினார்.
- 1996 - டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2001 - ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப் படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

## பிறப்புகள்

- 1840 - குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (இ. 1926)
- 1889 - ஜவகர்லால் நேரு, இந்தியப் பிரதமர் (இ. 1964)
- 1930 - எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ. 1967)
- 1931 - இரா. பெருமாள் ராசு, இந்தியக் கவிஞர்
- 1954 - காண்டலீசா ரைஸ், ஐக்கிய அமெரிக்காவின் 66 ஆவது செயலாளர்

## இறப்புகள்

- 1831 - ஹெகல், ஜேர்மன் நாட்டு மெய்யியல் அறிஞர் (பி. 1770)

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் நினைக்க வேண்டாம்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அகிம்சைப் போராட்டத்துக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி வடக்கு கிழக்கு எங்கும் நேற்றையதினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இந்த அகிம்சைப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அகிம்சைப் போராட்டங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டியவை. ஏனெனில் அவை ஜனநாயகத்தில் வலிமையானவை.

எனவே வலிமையான ஜனநாயகப் போராட்டங்களுக்கு மதிப்பளிப்பதன் மூலம் ஜனநாயகம் உறுதிப்படும். ஆகையால் ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வடக்கு கிழக்கில் நடந்த அகிம்சைப் போராட்டத்திற்கு மதிப்பளித்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

அகிம்சைப் போராட்டங்களை உதாசீனம் செய்வதானது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உணரப்பட வேண்டும். இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என்பது அகிம்சை வழியிலேயே மிக நீண்டகாலம் இடம்பெற்றது.

எனினும் சிங்கள ஆட்சியர்கள் அகிம்சைப் போராட்டத்தை நசுக்கியதுடன் அந்தப் போராட்டத்திற்கு உரிய தீர்வுகளையும் வழங்கத் தவறினர்.

அதன் விளைவாக இந்த நாடு மிகப்பெரிய யுத்த அழிவுகளை சந்தித்தது. இப்போது மீண்டும் தமிழ் மக்கள் அகிம்சை வழியில் தமது கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

எந்த விதமான வன்முறைகளுமின்றி, பூரண ஹர்த்தால் என்ற அகிம்சை வழிப் போராட்டத்தை நேற்றையதினம் வடக்குக் கிழக்கு மக்கள் நடத்தினர். இதற்கு நல்லாட்சி செய்பவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தாக வேண்டும்.

இது விடயத்தில் அரசு காட்டும் தாமதம் தமிழ் கைதிகளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். தமது விடுதலையை வலியுறுத்தி தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள தமிழ் அரசியல் கைதிகளில் பலரின் உடல்நிலை மிக மோசமாக பாதிப்படைந்துள்ளதான செய்திகள் சாதாரணமானவை அல்ல.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளுக்கு துரதிர்ஷ்டமான சம்பவங்கள் ஏதும் நடக்குமாயின் அது சிங்கள-தமிழ் நல்லுறவை மிகக் கடுமையாகப் பாதிக்கும். அதுமட்டுமன்றி கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தமை தமிழ் மக்கள் செய்த பெரும் தவறு என்பதாகவே நிலைமை முடியும்.

எனவே தமிழ் அரசியல் கைதிகளை காலதாமதமின்றி உடனடியாக விடுதலை செய்வது அரசின் தார்மீகக் கடமை. இதற்கு அப்பால், கைதிகளின் விடுதலைக்காக அகிம்சை வழியில் நேற்றைய தினம் வடக்கு கிழக்கில் நடந்த ஹர்த்தால் வடக்கு கிழக்கு மக்களின் ஒற்றுமைப் பலத்தை நிரூபித்துக் காட்டியுள்ளது. இதுபோல தமிழ் மக்களுக்கு விரோதமாக கொழும்புத் தமிழ் அரசியல் தலைமையைச் சேர்ந்த சிலர் செய்யும் செயலுக்கு எதிராகவும் தமிழ் மக்கள் தங்கள் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிப்படுத்தி அரசியல்வாதிகளைக் கட்டுப்படுத்துவதும் கட்டாயமானதாகும்.

இல்லையேல் தமிழ் மக்களை எப்படியும் ஏமாற்றலாம் என்று ஏமாற்றுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் நினைத்துவிடுவர்.

# கடைகளை திறக்குமாறு வர்த்தகர்களுக்கு மிரட்டல்

## யாழ்.நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட நேற்றைய ஹர்த்தாலின் போது, கடைகளை மூடி ஆதரவு தெரிவித்த வணிகர்கள் சிலரை கடைகளை திறக்குமாறு இனந்தெரியாத நபர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் யாழ்.நகரில் உள்ள சில கடைகளில் இடம்பெற்று உள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் நிபந்தனை இன்றிய விடுதலையினை கோரி ஐந்தாவது நாளாக ஆபத்தான கட்டத்திலும் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது போராட்டத்திற்கு ஆதரவாகவும், அவர்களது கோரிக்கையை முன்வைத்தும் பல கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் நேற்றைய தினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தன.

இதன் அடிப்படையில் நேற்று வடக்கு, கிழக்கு முழுவதும் கடைகளை மூடி வியாபாரிகள் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்கியிருந்தனர். இவர்களோடு முஸ்லிம் வியாபாரிகளும் கடைகள், உணவு நிலையங்களை மூடி ஆதரவு வழங்கியிருந்தனர்.

இவ்வாறு நேற்றுக் காலை கடைகள் திறக்கப்படுமா? மூடப்படுமா? என்ற சந்தேகத்தில் யாழ்.நகரில் உள்ள தமது வியாபார நிலையங்களுக்கு வருகை தந்த கடை உரிமையாளர்கள், தமது கடைகள் முன்பாக காத்து நின்றுள்ளனர். இதன்போது அங்கு வந்த சில நபர்கள் கடைகளை திறக்குமாறும் இன்று ஹர்த்தால் இல்லை எனவும் கூறியுள்ளனர்..

எனினும் சந்தேகம் காரணமாக திறக்க மறுத்த கடை உரிமையாளர்களை, திறக்குமாறு அதட்டும் தொனியில் கூற அவர்களும் கடைகளை திறந்து விட்டு, பின்பு அவர்கள் போனதும் கடைகளை மூடிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸாரிடம் கேட்ட போது, அவ்வாறான முறைப்பாடுகள் எவையும் தம்மிடம் பதிவு செய்யப்படவில்லை என தெரிவித்தனர். (எ-4)

# பேருந்து மீது கல்வீச்சு

(கரணவாய்)

பருத்தித்துறை டிப்போவில் இருந்து நேற்று அதிகாலை 4.45 மணிக்குப் புறப்பட்ட இலங்கை பேருந்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று மந்திகை சிலையடிப் பகுதியில் கல்வீச்சு தாக்குதலுக்குள்ளாகியது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத சிலர் கல்வீச்சு தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு பயணிகளுடன் சென்ற மேற்படி பேருந்து யாழ்ப்பாணம் நோக்கி விரைந்தது. மேற்படி கல்வீச்சு தாக்குதலில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து பருத்தித்துறை டிப்போவிலிருந்து எந்த விதமான பேருந்து சேவைகளும் இடம்பெறவில்லை.(எ-3,60)

# வழமைக்கு திரும்பியது வடக்கு ரயில் சேவை

இரத்து செய்யப்பட்டிருந்த வடக்கு ரயில் வழி போக்குவரத்துக்கள் நேற்றுக் காலை முதல் வழமைக்கு திரும்பியுள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

வவுனியாவிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரஜரட்ட ரெஜின ரயில், தம்புத்தேகம மற்றும் செனரத்கம ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று முன்தினம் தடம்புரண்டது.

இந்தநிலையில் தடம்புரண்ட ரயில் நேற்று முன்தினமிரவு வரை மீளமைக்கப்பட்டிருக்காத நிலையில் அஞ்சல் ரயில் சேவைகள் இடம்பெறவில்லை என ரயில்வே கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வடக்கு ரயில் வழித்தடத்தில் நேற்று முன்தினம் இரவு பயணிக்கவிருந்த 4 அஞ்சல் ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# முன்பள்ளிகளின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வட மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலைநிகழ்வும் இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வட மாகாண ஆரம்பபிள்ளை பருவ அபிவிருத்தி பிரிவில் பணிப்பாளர் ஜெயா தம்பையா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராசா, கௌரவ விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-12)

# தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைப் பெண் விடுதலை

## அவுஸ்ரேலிய அரசு தெரிவிப்பு

(கான்பரா)

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் அவுஸ்ரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ்ப் பெண் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயாரான குறித்த பெண் கடந்த மூன்று ஆண்டுகளாக அவுஸ்ரேலிய தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தப் பெண் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தமிழ்ப் புகலிடக் கோரிக்கையாளரான குறித்த பெண் என்ன காரணத்திற்காக அவுஸ்ரேலியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக திகழ்வார் எனப் பாதுகாப்பு தரப்பினர் கருதினார்கள் என்பதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை.

அதேபோன்று என்ன காரணத்திற்காக குறித்த பெண் புகலிடக்கோரிக்கையாளர் விடுதலை செய்யப்படுகின்றார் என்பது பற்றியும் அறிவிக்கப்படவில்லை. ரஞ்சினி என்ற பெண்ணே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார். விடுதலை செய்யப்பட்ட குறித்த பெண் புகலிடக் கோரிக்கையாளர் பெருமகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார். ரஞ்சினியின் கணவர் ஓர் அவுஸ்ரேலிய பிரஜை என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலிய தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற ரீதியில் குறித்த பெண் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் வேலழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-12)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய
பழமரங்களைக் கேட்டுப்பார்
உனது பரம்பரையின் கனவுகளை
இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்"

-கவிஞர் வ.ஜ.ச.ஜெயபாலன்

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



சாதாரண தேவையான எளிய உணவும் உடையும் கொடுக்க முடியாத நாட்டிற்கு எதற்கெடுத்தாலும் மற்றவர்களை எதிர்பார்த்து நிற்கின்ற ஒரு நாட்டிற்குப் பெருமை என்ன வேண்டிக் கிடக்கிறது. மதம், கர்மம் எல்லாவற்றையும் கங்கையில் வீசி எறிந்துவிட்டு முதலில் வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெற உன்னைத் தயார் செய்து கொள்.

பணமோ, பெயர் புகழோ, கல்வியறிவோ, எதையும் சாதித்து விடாது; குணநலம் ஒன்று தான் கடினச் சுவர்களையெல்லாம் பிளந்து கொண்டு போக வல்லது.

முட்டாளே, சக்தியும் மற்றவையும் பிறர் தந்து வருபவையா என்ன? அது உனக்குள்ளேயே உள்ளது. காலம் வரும்போது தானாக வெளிப்படும். நீ வேலையைத் தொடங்கு. பிறகு பார். உன்னாலேயே தடுக்க முடியாத அளவு சக்தி வெளிப்படுவதைக் காண்பாய். பிறருக்காக ஒரு சிறிதே கவலை செய்தாலும் அது நம்மிடம் சக்தியைக் கிளர்ந்தெழச் செய்யும். மற்றவர்களின் நன்மையை நினைத்துக் கொண்டிருப்பது கூட மனதில் சிங்கத்தின் வலிமையை உண்டாக்கும்.

நமது புராதன மக்கள் சட்டங்களும் பழக்கவழக்கங்களுளும் தவறானவையாக இருந்தால் இந்தியாவிற்கு வீழ்ச்சி ஏற்படவில்லை: அவர்கள் கண்ட முடிவுகளை முறைப்படி செயல்முறைப்படுத்தாதது தான் வீழ்ச்சிக்குக் காரணம்.

# களத்தில் நான் ரொம்ப கெட்டவன் வெற்றிக்காக எதையும் செய்வேன்

## டிவில்லியர்ஸ் தெரிவிப்பு



நான் ஆடுகளத்தில் நல்ல மனிதராக இருக்கமாட்டேன் என்று தென் ஆபிரிக்க அணியின் அதிரடி வீரரான டிவில்லியர்ஸ் கூறியுள்ளார்.

தென் ஆபிரிக்க அணியின் ஒருநாள் போட்டி தலைவரான டிவில்லியர்ஸ் மைதானத்தில் ஒரு இடம் விடாமல் பந்தை அனைத்து பக்கமும் விளாசி பட்டையை கிளப்புவார்.

இதனாலே அவரை ரசிகர்கள் "மிஸ்டர்-360" என்று அழைப்பர்.

அதே சமயம் வீரர்கள் அவரை சீண்டினாலும் சரி, பந்தை எறிந்து காயப்படுத்த முயற்சி செய்தாலும் சரி சிரித்து கொண்டே அதிரடி காட்டுவார்.

இந்த நிலையில் பெங்களூரில் நடக்கும் 2வது டெஸ்ட் போட்டியில் களமிறங்கும் டிவில்லியர்ஸ் தனது 100வது டெஸ்ட் போட்டியை விளை யாட உள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில்.

100வது போட்டியில் களமிற ங்கப் போகிறேன் என்பதை விட இந்தியா எங்களை விட முன்னி லையில் இருக்கிறது என்பதே எனக்கு அதிக நெருக்கடியை கொடு க்கிறது.

பெங்களூரில் போட்டியில் வெற்றிப் பெற்று தொடரை எங்கள் பக்கம் கொண்டு வர வேண்டும்.

நான் ஆடுகளத்தில் ரொம்ப கெட்டவன். எங்கள் அணி வெற்றி பெற என்ன வேண்டுமானாலும் செய்வேன்.

எதிரணி வீரர்கள் ஸ்லெட்ஜிங் செய்தால் நானும் ஸ்லெட்ஜிங் செய்வேன். நான் செய்ய நினை த்தால் அதை செய்து முடிப்பேன்.

மேலும், விராட் கோலியின் தொழில்நுட்பம் மற்றும் அவரது சிறிய தவறுகள் பற்றி கூறி அவரது ஆட்டத்தை திசைதிருப்ப முயற்சி செய்வேன்.

அது எங்களுக்கு வெற்றியை தேடித் தரும். நான் எதற்கும் கவலைப்படமாட்டேன்" என்று கூறி யுள்ளார். (க)

## இறுதிப் போட்டியில் சென்.மேரீஸ்




இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட பிரிவு - 2 ற்கான உதைபந்தாட்டப் போட்டியில் வடக்கின் முன்னணி உதைபந் தாட்ட அணியான யாழ்.நாவாந்துறை சென்.மேரீஸ் விளையாட்டுக் கழகம் வெலிகம ஐக்கிய விளையாட்டுக்கழக அணியினை சொந்த மைதானத்தில் வைத்து வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியில் ஜெக்சன் 1 கோல்களை பெற்று அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். வடகிழக்கில் இருந்து பிரிவு - 2 ற்கு தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு அணி சென்.மேரீஸ் அணி என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிப்போட்டி யாழில் நடைபெறவுள்ளது. (க)

## சதுரங்கப் போட்டிகள்

முதலமைச்சர் கிண்ணத்து க்கான மாகாண மட்ட சதுரங்கப் போட்டிகள் இன்று சனி மற்றும் நாளை ஞாயிறு தினங்களில் புத் தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வலய மட்டப்போட்டிகளில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்கள் மாகாண மட்டப்போட்டியில் கலந்து கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்து ள்ளனர். (க)

## அஞ்சலோட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள அஞ்சலோட்ட நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி யாழ். மத்திய கல் லூரி மைதானத்தில் நடைபெறவு ள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரு ம்பும் பாடசாலைகள் மற்றும் விளை யாட்டுக்கழகங்கள் மெய்வன்மைச் சங்கத்தின் செயலாளர் எஸ்.சுகிர்த னுடன் 077 6737598 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொட ர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட் டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (க)

## சென்.ஜோன்ஸ்-சென்.பீற்றர்ஸ் ஆட்டம் சமநிலையில் முடிவு

இலங்கைப்பாடசாலைகள் துடுப் பாட்டச் சங்கம் நடத்தும் பிரிவு இர ண்டில் இடம்பிடித்துள்ள 13 வயது க்கு உட்பட்ட அணியினருக்கான துடுப்பாட்டத் தொடரில் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரிக்கும் இடையிலான டெஸ்ட் ஆட்டமொ ன்று சமநிலையில் முடிவடைந்து ள்ளது.

அண்மையில் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்து, 175-7 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடை நிறுத்தியது.

அதிகபட்சமாக யூடிற் ஆட்ட மிழக்காமல் 45 ஓட்டங்களை யும், சயித் ஆட்டமிழக்காமல் 33 ஓட்டங்களையும் வினோசன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரி அணி சார்பில் பெர் னாண்டோ, சந்திமால் ஆகியோர் தலா 2 இலக்குகளை யும் றொட்றிக்கோ, ஜெயசுந்தர ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர.

தனது முதலாவது இன்னி ங்ஸ்க்காக துடுப்பெடுத்தாடிய சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி 90-3 என்ற நிலையில் இருந்த பொழுது போதிய வெளிச்சமி ன்மை காரணமாக ஆட்டம் கைவி டப்பட்டது.

அதிகபட்சமாக நுவான் 47 ஓட்டங்களையும், ரணசிங்க 24 ஓட்டங்களையும், கெட்டியாராச்சி 9 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பில் சுகேதரன் 3 இலக்கை வீழ்த்தினார். (க)

## இந்தியா-தெ.ஆபிரிக்கா 2 ஆவது டெஸ்ட் இன்று

இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் இடையேயான 2ஆவது டெஸ்ட் பெங்களூரில் இன்று தொடங்குகிறது. இதற்கிடையே நேற்று முன்தினம் பயிற்சியின் போது தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர் காயம் அடைந்தார்.

இதனால் அவர் எஞ்சிய போட் டிகளில் இருந்து விலகியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக மொகாலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி 108 ஓட்ட ங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதன் மூலம் 4 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 1:0 என முன்னிலை வகிக்கிறது. இந் நிலையில் 2ஆவது டெஸ்ட் இன்று பெங்களூரில் உள்ள சின்னசாமி மைதா னத்தில் இன்று தொடங் குகிறது.

இதற்காக இரு அணி வீரர்க ளும் நேற்று தீவிர பயிற்சியில் ஈடு பட்டனர். (க)

## வெற்றி தோல்வியின்றி முடிந்தது சென்.ஜோன்ஸ்-அநு. மத்திபோட்டி

இலங்கை பாடசாலைகள் கிரிக் கெட் சங்கம் நட த்தும் 13 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கான பிரிவு 3 போட்டித் தொடரில், யாழ் ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூ ரிக்கும் அநுராதபுரம் மத்திய கல்லூரிக்குமிடையிலான போட்டி, வெற்றி தோல்வியின்றி முடிவடை ந்துள்ளது. சென். ஜோன்ஸ் கல் லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப் போட்டியில், அநுராதபுரம் மத்திய கல்லூரி, முதலில் துடுப்பெடுத்தா டியது. அவ்வணி, சகல விக்கெட் டுகளையும் இழந்து 75 ஓட்டங் களை மாத்திரம் பெற்றது. துடுப்பா ட் டத்தில் விக்கிரம 23 ஓட்டங்க ளைப் பெற, பந்துவீச்சில், கே. மதுசன் 5 விக்கெட்டுகளையும் ஜனார்த்தனன் 3 விக்கெட்டுகளை யும் பெற்றனர்.

தனது முதல் இனிங்ஸில் துடுப் பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி, 26 ஓவர்களில் 9 விக்கெட் டுகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற் றது.சென். ஜோன்ஸின் யூடிற் 33 ஓட்டங்களையும் வினோசன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச சில், அசங்க 4 விக்கெட்டு களையும் நவின் பண்டார 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றி னர். 75 ஓட்டங்களால் பின்த ங்கியிருந்த நிலையில், தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப் பெடுத்தாடிய அநுராதபுரம் மத்திய கல்லூரி, 5 விக் கெட்டுகளை இழந்து 58 ஓட்டங்க ளைப் பெற்றிரு ந்த போது, போட்டி முடிவுக்கு வந்தது. இதனால் போட்டி, வெற்றி தோல் வியற்ற முறையில் முடிவடைந்தது. எனினும், முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற காரணத்தால், போட்டிக்கான புள்ளிகள், சென். ஜோன்ஸ் கல்லூரிக்குக் கிடை த்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஐ.சி.சி.க்கு எதிரான கருத்து

### சயித் அஜ்மல் நீக்கம்




ஐசிசி-க்கு எதிராக குற்றம் சும த்திய காரணத்திற்காக பாகிஸ்தான் அணி வீரரான சயீத் அஜ்மலை கிரிக்கெட் வாரியம் நீக்கம் செய்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக இருந்தவர் சயித் அஜ்மல்.

பந்துவீச்சாளர்களுக்கான தர வரிசைப் பட்டியலில் முத லிடத் தில் இருக்கும் போது பந்துவீச்சில் சந்தேகம் இருப்பதாக புகார் எழவே, கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து பாகிஸ்தான் அணியில் சேர்க்கப் படாமல் இருந்தார்.

இந்நிலையில் சமீபத்தில் பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியில், ஐசிசி இரட்டை வேடம் போடுவதாகவும், வலது கை ஆப் ஸ்பின்னரை மட்டும் அதாவது பாகிஸ்தான் வீரர்கள் மீது நட வடிக்கை எடுக்கிறது எனவும் குற்றம் சாட்டினார்.

இதனையடுத்து சம்பள ஒப்ப ந்தத்தில் பி கிரேடில் இருந்த அஜ்மலை கிரிக்கெட் வாரியம் நீக்கம் செய்துள்ளது. (க)

# அரசியல் கைதிகளை விடுவிக்க ஜனாதிபதியால் கூட முடியாத நிலை



(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எண்ணம் இருந்தால் கூட அதனை தன்னால் நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு அரசியல் காரணங்கள் தன்னை கட்டுப்படுத்துகின்றன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னிடம் தெரிவித்ததாக சுவிஸர்லாந்து நாட்டின் தூதுவரிடம் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக் காட்டினார்.

நேற்று சுவிஸர்லாந்து நாட்டின் தூதுவர் ஹெய்ன்ஸ் வால்கர் நெடர்கூர்ன், வடக்கு முதல்வர் சி.வி விக்னேஸ்வரனை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு வடக்கு முதல்வர் கருத்து தெரிவிக்கையில்,

சுவிஸர்லாந்து பிரதிநிதிகளின் வருகை பிரதானமாக சிறைக்கைதிகள் பிரச்சினை தொடர்பாகவும், அவர்களை இன்னமும் விடுவிக்காதது ஏன்? என்றவாறே எழுந்தது

சிறைகளில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகள் 23 பேரின் நிலைமை மோசமாக இருக்கின்றது. அதிலும் 9பேர் நீர்கூட அருந்தாமல் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதனால் உயிரிழக்கும் தறுவாயில் உள்ளனர் என்று தெரிவித்த பொழுது, அதற்கு அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிடுங்கள் என்று சிறைக்கைதிகளிடம் நீங்கள் கேட்டிருக்கலாமே என்று வினவினர்.

உண்ணாவிரதத்தை கைவிடும்படி எந்த அடிப்படையில் கேட்பது. எதிர்வரும் திங்கட்கிழமையே இந்தப் பிரச்சினைக்கு முடிவை அறிவிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருப்பதால் ஒரு முடிவும் தெரியாமல் உண்ணாவிரதத்தை கைவிடுங்கள் என்று என்னால் கூற முடியாது. அதனால்தான் தயங்கிக் கொண்டு இருக்கின்றேன் என அவர்களிடம் தெரிவித்தேன்.

அவர்கள் என்னிடம், கைதிகள் உயிரிழந்தால் உங்களுக்குத் தானே நட்டம் அரசாங்கத்துக்கு எந்த நட்டமும் இல்லை தானே? அரசு அதனை நினைத்து வருந்தப் போவதுமில்லை கடந்த காலங்களில் இவ்வாறு தானே நடைபெற்றது என்று குறிப்பிட்டார்கள். அதற்கு, இதுவொரு பாரதூரமான விடயம், மக்கள் தமது எதிர்ப்பை அகிம்சை வழியில் எடுத்துக்காட்டுவதாகவே இந்த உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான போராட்டங்கள் கூட நன்மை அளிக்காமல் போய்விட்டால் மக்கள் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்ளும் நிலையே ஏற்படும் என்றேன்.

மேலும் அவர்கள் இலங்கைக்கு புதிய அரசியல் யாப்பை உருவாக்க பல உதவிகளை செய்து கொடுத்திருக்கிறோம். இது தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேசியிருப்பதாகவும், எமது மாகாண நியதி சட்டங்களை உருவாக்குவதற்கு தாம் உதவி புரிவதாகவும் கூறி சென்றனர் என வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (எ-4)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்கள் மீது தாக்குதல்

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

தனியார் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற நான்கு பேருந்துக்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றைய தினம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதனால் குறித்த ஆடைத் தொழிற்சாலைக்கு ஊழியர்கள் செல்லவில்லை.

இதனை உணர்ந்த ஆடைத்தொழிற்சாலையின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த முகாமையாளர், ஊழியர்களை வேலைக்கு வரவேண்டும் என்று உத்தரவிட்டுள்ளதுடன் ஊழியர்களை அழைத்து வருவதற்கு நான்கு பேருந்துகளையும் அனுப்பி வைத்துள்ளார்.

இதனையடுத்து ஊழியர்கள் தொழிற்சாலைக்கு சென்று தமது பணிகளை முடித்துக் கொண்டு பேருந்துகளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை கிளிநொச்சி திருநகர் பகுதியில் வைத்து பேருந்துகள் வழிமறிக்கப்பட்டு இனந்தெரியாதோரால் அடித்து நெருக்கப்பட்டுள்ளன. இத் தாக்குதலால் முற்றாக சேதமடைந்த பேருந்துகள் நான்கும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டதுடன் இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-12,277)

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது தாக்குதல் இடம்பெற்றது!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

(கொழும்பு)

போர் தவிர்ப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்த, புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது படையினரால் கனரக ஆயுதங்கள் மூலம் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது உண்மையே என்று ஒப்புக் கொண்டுள்ளார் இராணுவத்தின் முன்னாள் தளபதி பீல்ட் மார்ஷல சரத் பொன்சேகா.

ஐபிசி தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது, புதுக்குடியிருப்பு மருத்துவமனை படையினரின் பீரங்கித் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, புதுக்குடியிருப்பு மருத்துவனை கனரக ஆயுத தாக்குதலுக்கு இலக்கானது. ஆனால் அது தவறுதலாக இடம்பெற்றது.

அதேவேளை, போர்க்குற்றங்கள் இடம்பெற்றிருந்தால் அதற்குப் பொறுப்பேற்கத் நான் தயாராகவுள்ளேன்.

இசைப்பிரியாவின் படுகொலை வருந்தத்தக்க செயல், நடேசன், புலித்தேவன் ஆகியோரின் மரணங்கள் தொடர்பாக நிச்சயமாக அனைத்துலக விசாரணை நடத்தப்பட வேண்டும்.

போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற ஐ.நா அறிக்கை பொய்யானது. அத்துடன் நவநீதம்பிள்ளையின் புள்ளிவிபரங்கள் ஆதாரமற்றவை.

போரின் போது மக்கள் வாழ்விடங்களில் குண்டுகள் வீசப்பட்டதைக் காட்டும் செய்மதிப் படங்களை ஐ.நா மற்றும் மனித உரிமை அமைப்புகள் வெளியிட்டுள்ளது. ஆனால் தாக்குதலின் போது தரையில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் உயர் தொழில்நுட்ப கருவிகளை இராணுவம் பயன்படுத்தியது.

அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமான சட்டங்களுக்கு அமைவாகவே தாம் போரை நடத்தினோம் என சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

இராணுவம் இரகசிய முகாம்களை வைத்திருந்தது என்பதை ஒப்புக் கொண்ட அவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்த பின்னர், கருணாவும் கூட அத்தகையதொரு இரகசிய முகாமில்தான் மறைந்திருந்தார் என்றும் தெரிவித்தார்.

இரகசிய முகாம்கள் இராணுவப் புலனாய்வில் முக்கியமானதொரு அங்கம் என்று குறிப்பிட்ட அவர், ஆனால் மகிந்த ராஜபக்ஷவும், கோத்தபாய ராஜபக்ஷவும், துணை ஆயுதக் குழுக்களை வைத்திருந்தனர் என்றும் குற்றம்சாட்டினார். (எ-11)

## வடக்கு - கிழக்கு...

வுக்கு கொண்டுவரப்பட்டது. இவ் உறுதியளிப்பின் பிரகாரம் கடந்த ஏழாம் திகதிக்கு முன்பாக தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எனினும் அவ்வுறுதியளிப்பு செயலுருப்பெறாத நிலையில், கைதிகளை பிணையில் விடுவிப்பு, கட்டம் கட்டமாக விடுவிப்பு என பல கதைகள் தற்போது வரை அரசினால் கூறப்பட்டு வருகின்றன. இதற்கு அப்பால் அரசியல் கைதிகள் பிணையில் விடுவிப்பதற்கு வடக்கு மாகாண சபை உள்ளிட்ட பல தரப்பினர் எதிர்ப்பு தெரிவித்த போதிலும் அவ் எதிர்ப்புக்களை மீறியும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை என அறிவித்த அரசியல் கைதிகள் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களில் இருபத்தைந்து கைதிகளே தமிழர்கள் எனவும் ஏனையவர்கள் சிங்களவர்கள் எனவும், பிணை அனுமதி வழங்கப்பட்டதே தவிர அவர்கள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை எனவும் தெரிவித்து, தாம் கடந்த முறையின் போது எமாற்றப்பட்டதனை உணர்ந்த கைதிகள் மீண்டும் உணவு தவிர்ப்பு போராட்டத்தினை ஆரம்பித்து இன்றோடு ஐந்தாவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், பொது மன்னிப்பில் நிபந்தனையின்றி விடுதலை செய்ய கோரியும் தமிழர் தாயகம் முழுவதும் முன்னெடுக்கப்பட்ட முழுநாள் கடையடைப்பு வெற்றி பெற்றுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## சுமந்திரன்...

அவுஸ்திரேலியக் கிளை இணைந்து நேற்று மாலை 7 மணியளவில் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்த சுமந்திரனுடனான மக்கள் சந்திப்பு நடைபெறவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் சிட்னியில் சுமந்திரனுக்கெதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை அவுஸ்திரேலிய பொலிஸாரின் துணையுடன் அடக்கிய அவுஸ்திரேலியத் தமிழ்க் காங்கிரஸினர்,

மெல்பேர்ன் தேசப்பற்றாளர்களின் எதிர்ப்பையும் மீறி மெல்பேர்னிலும் ஏற்கெனவே திட்டமிட்டபடி சுமந்திரன் கலந்துகொள்ளும் கூட்டத்தை நடத்துவோம் என சூளுரைத்திருந்தனர்.

இந்நிலையில் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சுமந்திரனுக்கெதிரான பதாகைகளுடன் சென்ற 60க்கும் மேற்பட்ட தேசப்பற்றாளர்கள் மண்டபம் பூட்டப்பட்டுள்ள நிலையில் மண்டபத்துக்கு வெளியே நின்றதாக தெரிவிக்கப்பட்டது.

மண்டபம் பூட்டப்பட்டுள்ள நிலையில் காணப்பட்டதாகவும் உள்ளே சுமந்திரன் எம்.பி இல்லை என்றும் ஒரு சிலரே நின்றதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர் ஒருவர் தெரிவித்தார். (எ-11)

## வங்கக்கடலில்...

படுகிறது.

இதனால், இலங்கையிலும், தென்னிந்தியாவிலும், இந்த வார இறுதியில் அல்லது அடுத்த வார தொடக்கத்தில் வெள்ள ஆபத்து ஏற்படக்கூடும்.

இந்த காற்றழுத்தம் காரணமாக நாடு முழுவதும் கடும் மழை மற்றும் சூறாவளிக் காற்றின் தாக்கம் இருக்கும் என்றும் கருதப்படுகிறது. இந்த வார இறுதியில் நாட்டின் அனைத்துப் பகுதிகள், இந்தியாவின் கேரளா, தமிழ்நாடு ஆகிய இடங்களில் வெள்ள அபாயம் உள்ளது.

அடுத்த வாரம் திங்கள் முதல் புதன் வரையான நாட்களில், தமிழ்நாடு, கேரளா, தென் கர்நாடகா ஆகியவற்றில், கடும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு, கொச்சி, மதுரை போன்ற இடங்களில் 100 மி.மீ இற்கும் அதிகமான மழைப் பொழிவு இருக்கலாம். கோயமுத்தூர், பெங்களூரு, சென்னையில் வெள்ள ஆபத்து உள்ளது.

கடந்த திங்கட்கிழமை கடலூரில் கரை கடந்த காற்றழுத்தம் காரணமாக, தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதுடன், 60 பேர் வரை பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் புதிய காற்றழுத்தம் உருவாகியிருப்பது அச்சத்தை உருவாக்கியுள்ளது. (எ-12)

## இழுபறிகளுக்குப்...

வழங்கப்பட்ட போதிலும், நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட பிணை விதிகளை பூர்த்தி செய்யமுடியாத நிலையில் அவர்கள் மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று அவர்களது உறவினர்கள் பிணையில் ஒப்பமிட்டதை அடுத்து அவர்களை விடுவித்ததாக சிறைச்சாலைகள் ஆணையாளர் ரோஹண புஷ்பகுமார தெரிவித்தார்.

தலா 10 இலட்சம் ரூபாய் கொண்ட இரு சரீரப் பிணை விதிக்கப்பட்டதோடு, பிணை வழங்கும் குறித்த பிணையாளர்கள், சந்தேக நபர்களின் ஊரைச் சேர்ந்தவர்கள் என கிராம சேவகர் உறுதிப்படுத்த வேண்டும் என பிணை விதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், சந்தேகநபர்களின் கடவுச்சீட்டுகளை தடைசெய்வதாக அறிவித்த நீதவான், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் அல்லது கொழும்பிலுள்ள தீவிரவாத ஒழிப்பு விசாரணை பிரிவில் சமுகமளிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

தாங்கள் தமது முகவரியை மாற்றுவதாயின், அது குறித்து தீவிரவாத ஒழிப்பு விசாரணை பிரிவிற்கு அறிவிக்க வேண்டும் என அவ் விதிகள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## 13 அரசியல்...

பில் விடுதலை செய்யுமாறுகோரி சிறைகளில உள்ள அரசியல் கைதிகள் கடந்த 8 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆறாவது நாளாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர்களில் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டதன் காரணமாக கட்டாயத்தின் பேரில் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் என். மதனசேகரம் என்பவரும் கண்டி தும்பறை சிறைச்சாலையில் ஜி.கிருபானந்தன், கே.சுந்தரமணி, ஆர்.ரூபச்சந்திரன், டீ.சுரஞ்சு கிசாந்த, கே.மனோகரன், எஸ்.ஜிவோசன், ரி.செல்வக்குமார் ஆகிய 7 பேரும், அனுராதபுரம் சிறைச்சாலையில் மா.சிவதாசன், க.குகதாசன், ரா.சுரேஸ், ரா.ஜெகன், பு.அரவிந்தன் ஆகிய 5 பேரும் நேற்றைய தினம் உடல் நிலை மோசமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி தமக்கு உரிய பதிலை தரும் வரை இவர்கள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

மேலும் நேற்றைய தினம் வடமாகாணத்தில். தமக்காக ஹர்த்தாலினை அனுஷ்டித்த அனைவருக்கும் தமது நன்றிகளையும் தெரிவித்துள்ளனர். (எ-9)

## வடக்கு - கிழக்கு...

அரசியல் கைதிகளின் நிபந்தனையின்றிய் விடுதலையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதிலும் ஹர்த்தாலுக்கு தமிழ்த தேசிய கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் மாணவர் ஒன்றியங்கள் என்பன உட்பட பல அமைபபுக்கள் அழைப்பு விடுத்திருந்தன.

இந்நிலையில் நேற்றையதினம் பாடசாலைகள், வங்கிகள், வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதோடு, தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. இதனால் வடக்கில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் உள்ள நகரங்கள் வெறிச்சோடி காணப்பட்டிருந்தன.

எனினும் அத்தியாவசிய சேவை நிறுவனங்களான வைத்தியசாலைகள், சில உணவகங்கள் என்பன மட்டும் திறந்து காணப்பட்டிருந்தன.

இதற்கு யாழ் மற்றும் கிளிநொச்சி வர்த்தகர்கள் பூரண ஆதரவு வழங்கியிருந்ததோடு, வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிம்களும் தமது வியாபார நிலையங்களை மூடி முழுமையான ஆதரவு தெரிவித்தனர்.

சில இடங்களில் பொலிஸாரின் ரோந்து பணிகள், தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. பஸ்கள் மீதான கல்லெறி சம்பவங்கள் தவிர பெரிதாக எவ்வித வன்முறை சம்பவங்களும் பதிவாகவில்லை என வடக்கு, கிழக்கு பொலிஸ் நிலையங்கள் தெரிவிக்கின்றன.

பல வருடங்களின் பின்பு மக்களின் பூரண ஆதரவுடன் நடைபெற்ற ஹர்த்தாலாக இது பார்க்கப்படுகின்றது.

சிறைகளில் எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்குமாறு கோரி தொடர்ச்சியான போராட்டங்களை கடந்த காலம் முதற்கொண்டு முன்னெடுத்து வருகின்றனர். இதில் இறுதியாக கடந்த மாத முற்பகுதியில் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டம் உச்சமடைந்து ஐந்து நாட்களாக முன்னெடுக் கப்பட்டு வருகின்ற போதும், சிலரின் தலையீடுகளால் வெறும் வாய்மூல உறுதியளிப்பை மாத்திரம் நம்பி அத்தொடர் உண்ணாவிரத போராட்டம் முடி

23ஆம் பக்கம் பார்க்க....

## ஹெகலியவுக்கு...

குமார் நேற்றையதினம் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

காணாமல் போன மனித உரிமை செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோரது வழக்கு விசாரணை நேற்றையதினம் யாழ்.நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது வழக்கின் முக்கிய சாட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி மன்றில் ஆஜராகி சாட்சியம் அளித்திருந்த நிலையில் கடந்த தவணைகளில் 4 தடவைகள் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தும் ஹெகலிய ரம்புக்வெல மன்றில் சமுகமளிக்காத காரணத்தால் இந்த வழக்கு விசாரணைகளை விரைவாக விசாரணை செய்து முடிக்கவிருப்பதனால் நீதிபதியால் நேற்றையதினம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னணி சோசலிச கட்சியைச் சேர்ந்த லலித் குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகிய இருவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10-ம் திகதி காணாமல் போனார்கள்.

அவர்கள் பயணம் செய்த மோட்டார் வண்டி, கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது. இருப்பினும், அவர்கள் தொடர்பான தகவல் இதுவரையில் கிடைக்கவில்லை.

இவர்கள் காணாமல்போனமை தொடர்பில் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணைகள், யாழ். நீதவான் நீதிமன்றத்தால் நடத்தப்படும் என, கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் கடந்த 2011-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 23-ம் திகதி கட்டளை பிறப்பிக்கப்பட்ட நிலையில், தற்போது அந்த வழக்கின் விசாரணைகள் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றன.

வழக்கு விசாரணைகளின் போது, இருவரும் காணாமற் போனவர்களின் விபரங்களை திரட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள்.

அதனால் அவர்களுக்கு அரச தரப்பால் அழுத்தங்கள் தொடர்ந்து இருந்தன என அவர்கள் சார்பான சட்டத்தரணிகள் மன்றுக்கு தெரிவித்திருந்தனர்.

லலித், குகன் ஆகியோர் காணமற்போன சில நாட்களுக்கு பின்னர் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் கருத்து தெரிவித்திருந்த முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல, அவ் விருவரும் கடத்தப்படவில்லை. பொலிஸ் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். விசாரணை முடிந்த பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார் என நாம் இலங்கையர் அமைப்பின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான உதுல் பிரேமரத்ன, கடந்த 2012-ம் ஆண்டு ஒக்டோபர் 18-ம திகதி, யாழ். நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய ஹெகலிய ரம்புக்வெலவை மன்றில் ஆஜராகும்படி 4 தடவைகள் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தும் அவர் சமுகமளிக்கவில்லை

லலித் மற்றும் குகன் ஆகியோருடன் போராட்டங்கள், கூட்டங்களை நடத்திய போது அவர்களுடன் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்றைய தினம் மன்றில் சாட்சியமளித்திருந்தார்.

சாட்சியத்தை பதிவு செய்த நீதிபதி, ஹெகலிய ரம்புக்வெலவுக்கு பிடியாணை பிறப்பித்ததுடன் இந்த வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (எ-4,9)

## தமிழ் மக்கள் உணர்வுபூர்வ...

காது தொடர்ந்து ஏமாற்றி வரும் நிலையில் தமது விடுதலைக்காக தாமே போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களது போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் அவர்களது உடனடியான விடுதலையை வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாமும் ஏனைய தரப்புக்களும் விடுத்த வேண்டுகோளை ஏற்று இன்று (நேற்று) நடத்திய முழுமையான கடையடைப்பு மற்றும் புணிப்புறக்கணிப்பு போராட்டம் மிகவும் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடந்தேறியுள்ளது.

இப்போராட்டத்தில் அனைத்து தமிழ் மக்களும் மிகவும் உணர்வு பூர்வமாகவும் ஒற்றுமையாகவும் முழு அளவில் பங்கெடுத்துள்ளனர்.

ஒற்றுமையான இச் செயற்பாடானது தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படல் வேண்டும் எனபதில் தமிழ் மக்கள் ஒருமித்த நிலைப்பாட் டினை கொண்டுள்ளனர் என்ற தெளிவான செய்தியை இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்தியுள்ளது.

அரசியல் கைதிகள் அனைவரையும் தமது சொந்த உடன்பிறப்புக்களாக கருதி அவர்களது விடுதலைக்கான மேற்படி போராட்டம் வெற்றிகரமாகவும் அமைதியாகவும் நடந்தேறுவதற்கு உதவிய அனைத்து தரப்புக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் நன்றி கூறுகின்றோம்.

எமது மக்களினதும் அரசியல் கைதிகளதும் கோரிக்கைகளுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அரசு அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுவிக்க சர்வதேச சமூகம் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் எனக் கோருகின்றோம்.

அவர்களது விடுதலைக்காக நாம் மக்களுடன் இணைந்து தொடர்ந்து போராடுவோம் என்றுள்ளது. (எ-11)

## ‘சுமந்திரன் எம்.பிக்கு...

னேஸ்வரனை கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சித் தலைமையிடம் கோரியுள்ளதாகவும், முதலமைச்சர் முன்னாள் நீதியரசராக இருந்தாலும் கட்சியின் முடிவுகளுக்கு கட்டுப்படத்தான் வேண்டும் எனவும் பேட்டியொன்றினை அளித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்றையதினம் வடக்கு முதலமைச்சரின் வாசஸ தலத்தில் அவரை சந்தித்த ஊடகவியலாளர்கள் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யாரும் எதுவும் கூறுவார்கள் அதைப்பற்றி எல்லாம் பெரிதாக அலட்டிக்கொள்ள முடியாது.

இருந்த போதிலும் சுமந்திரனின் அனைத்து கேள்விகளுக்கான பதிலை அவருக்கு நான் வழங்க, பதில்களை தயாரித்து கொண்டுள்ளேன். ஆகையால் சரியான நேரத்தில் அந்த பதில்களை வெளியிடுவேன்.

என்னை பற்றி பலர் பலவிதமாக கூறமுடியும், ஒருவர் எனது தாடி சரியில்லை, மற்றொருவர் அது சரியில்லை இது சரியில்லை என்றெல்லாம் கூற முடியும். அதற்காக நான் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் அதனை தற்போது அப்படியே விட்டு விடுவோம் என முதலமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை முதலமைச்சருக்கும், சுமந்திரனுக்கும் இடையில் நிலவி வந்த பனிப்போர் நேற்று முதலமைச்சர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு நேரடியாகவே பதிலளித்ததன் மூலம் உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மோதல் கட்சியில் பல திருப்பங்களை ஏற்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

## பிரதமர் சிங்கப்பூரு...

வும் சிங்கப்பூருக்குச் சென்றிருக்கிறார்.

நேற்றுக் காலை 7.40 மணியளவில் கட்டுநாயக்கவில் இருந்து சிங்கப்பூர் புறப்பட்ட விமானத்தில் இவர்கள் பயணம் செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் தற்போது சிங்கப்பூரிலேயே தங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (எ-11)


யாழில் ஓர் புதிய உதயம்
NEW MATHS COLLEGE
2016 இற்குரிய தரம் 6 இற்கான தமிழ் ஆங்கில மொழி மூலமான கணித பாட வகுப்பு இன்று (14.11.2015) சனிக்கிழமை
மு.ப. 11.00 மணியளவில் ஆரம்பமாகும்
இடம் : 158, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (Science Hall இற்கு அருகில்)
தொடர்பு : 0777071961
குறிப்பு : தரம் 6 -11 வரையான தமிழ், ஆங்கில மொழி மூலமான கணித வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
நிர்வாகியும் கணித ஆசிரியரும்
K.உமாகரன்
(C-2720)



யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக SIKARAM HOTEL SCHOOL
UK – SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA
விரும்பிய எந்த நாட்டுக்கும் சென்று இலட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்க
உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்



UK Certified Hotel Management
Leading to University of Sunderland UK
வெளிநாட்டுப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெ
SPOT ADMISSION

| | |
|---|---|
| 16-11-2015 திங்கள் 2 மணி | யாழ் சிகரம் விரிவுரை மண்டபம் |
| 17-11-2015 செவ்வாய் 9 மணி | மன்னார் YMCA மண்டபம் |
| 18-11-2015 புதன் 9 மணி | வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல் |
| 18-11-2015 புதன் 2 மணி | கிளிநொச்சி சோலைவனம் விடுதி |

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள்
பதிவுகளுக்கு 0773 616 798
Green Grass
19-11-2015
வியாழன் 2.00 மணி
யாழ் கிறீன் கிறாஸ் வலம்புரி ஹொட்டேலில்
GRAND HOTEL SHOW
ஹொட்டேல் கற்கை விளக்கச் செயலமர்வு
Special Workshop on Hotel Management
முற்பதிவு அவசியம்
SIKARAM HOTEL SCHOOL
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 0011
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
web : www.sikaram.lk
(C-2721)



திரு.தம்பிராசா கிருபானந்தராசா
(கிருபா அண்ணா)
அஸ்தி அடக்கம் செய்தல்
நவஜீவன வளாகத்தின் முன்னாள் இயக்குநர் அமரர் திரு.தம்பிராசா கிருபானந்தராசாவின் அஸ்தி 14.11.2015 இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முரசுமோட்டை நவஜீவன வளாகத்தில் உள்ள புனித சிற்பாசாரி ஆலயத்தில் ஆராதனை ஆரம்பமாகும்.
இரங்கல் உரைகளைத் தொடர்ந்து வழிபாடும் அதன் பின்னர் பரந்தன் முல்லைச்சாலையில் உள்ள 1-ம் கட்டை கல்லறைச் சாவடியில் அஸ்தி அடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் நவஜீவன அன்பர்கள் மற்றும் நவஜீவன பழைய மாணவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.
தகவல்
திருமதி கி.மனோரஞ்சினி (ரஞ்சி அக்கா) மற்றும் குடும்பத்தினர்.
(2280)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.